# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 14.08.2021 supeedsam.com supeedsam@gmail.com









## கிழக்கில் நில ஆக்கிரமிப்புக்கு முஸ்தீபா?

### தோடரும் ஆக்கிரமிப்பு முயற்சிகள்

(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள காராமுனை காட்டு மரங்களை வெட்டி தீயிட்டு சுமார் 8 ஏக்கர் காடு அழிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நில ஆகிரமிப்புக்கான செயற்பாடு கடந்த சில தினங்களுக்கு முன்னர் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள சிலரால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலாளர் அதிகார எல்லைக்குட்பட்ட மாங்கேணி 21 ஜி கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள வாகனேரி

02 ஆம் பக்கத்தில்...

## யாழ். போதனாவில் நிரம்பி வழியும் கோரோனா தோற்றாளர்கள்

(யாழ்.கீதன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை பொறுத்தவரை எமது இக்கட்டான நிலையை மக்களுக்கு அறிவிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றதென யாழ் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ் போதனா வைத்திய சாலையில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

02 ஆம் பக்கத்தில்...

## அரசாங்கத்திற்கு பெரிய எதிர்ப்பு இருக்கின்றது

### சிவனேசதுரை சந்திரகாந்தன் தேரிவிப்பு!




(மட்டு சுபீட்சம் நிருபர்)

அரசாங்கத்திற்கு பெரிய எதிர்ப்பு இருக்கின்றது, தற்போது நாட்டில் உள்ள நிலையை கருத்தில் கொள்ளாமல் நாட்டை முடக்காமல் இருப்பது தொடர்பாக பலதரப்பட்ட தப்பினாலும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது, துறை சார்ந்தவர்களும் நாட்டின் நிலையை முன்வைக்கின்றனரென மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற

02 ஆம் பக்கத்தில்...

## படுகோலைகள் குவிந்த நாடாக இலங்கை காணப்படுகிறது

### மட்டு. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன்



(துறையூர் சஞ்சயன் )

படுகொலைகள் குவிந்த நாடாக இலங்கை காணப்படுகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

தமிழர் தாயகத்தில் இடம் பெற்றுள்ள படுகொலைகளுக்கான நீதி கிடைக்கப்பெறுமா என வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

உயர்மட்டங்களிலிருத்து கீழ்மட்டம் வரை யுத்த மீறல்கள், மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்கிறது. சில படுகொலைகள்

02 ஆம் பக்கத்தில்...

## கட்சிகளின் தலைவர்களுக்கு அவசர அழைப்பு

(காந்தன்)

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுக்கு அவசர கூட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை (16) சபாநாயகர் தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம் பெறவுள்ளது.

தற்போதைய கொரோனா வைரஸ் தொற்று நிலைமையில் முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் அதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

## றிஷாத் பதூர்தீனை விடுதலை செய்யக் கோரி ஒரு இலட்சம் கையெழுத்து வேட்டை

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாத் பதுர்த்தீனை விடுதலை செய்யக் கோரி கிண்ணியாவில் நேற்று ஜும்ஆ தொழுகை பின் மக்களிடம் கையெழுத்து பெறப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...








## களுவாஞ்சிக்குடியில் கைக்குண்டுடன் முன்னாள் போராளி கைது



(எஸ்.சதீஸ்,ரக்ஸனா)

அம்பாறை திருக்கோவிலில் இருந்து மட்டக்களப்பு காத்தான்குடி பகுதிக்கு கைக்குண்டு ஒன்றை விற்பனைக்கு எடுத்து சென்ற விநாயகபுரத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை களுவாஞ்சிக்குடி நகர்பகுதியில் வைத்து விசேட

02 ஆம் பக்கத்தில்...

## தாயை இழந்த இளம் யுவதி தூக்கிட்டு தற்கோலை

### மட்டக்களப்பில் சம்பவம்

(வவுணதீவு எஸ்.சதீஸ்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட

02 ஆம் பக்கத்தில்...

## நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருந்திருவிழா நேற்று ஆரம்பம்



(எஸ் தில்லைநாதன்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருந்திருவிழா நேற்று 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது

நாட்டில் பரவி வரும் கொரொனதொற்று காரணமாக சுகாதார நடைமுறைக்கு ஏற்ப சிவாச்சாரியார்கள் தொண்டர்களும் மட்டுமே கோவிலுக்குள் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.இவர்களே

02 ஆம் பக்கத்தில்...















## மதுரை ஆதீனம் காலமானார்



மதுரை ஆதீனம் அருணகிரி நாதர் உடல்நலக்குறைவு காரணமாக நேற்று உயிரிழந்துள்ளார். மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் (77 வயது), உடல்நலக்குறைவு காரணமாக

02 ஆம் பக்கத்தில்...




## நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த

நாளாந்தம் பெருந்திருவிழாவை நடத்தி வைப்பார்கள்.திருவிழாக் காலத்தின் போது சுவாமி உள் வீதி மட்டுமே உலா வருவார்.

பக்தர்கள் வீட்டில் இருந்தவாறே திருவிழாவைக் காண்பதற்கு வசதியாக தொலைக் காட்சிகள் சமூகவலைத்தலங்கள் திருவிழா நிகழ்வுகளை ஒளிபரப்ப கோவில் நிர்வாகம் அனுமதி வழங்கியுள்ளது

வெள்ளிக்கிழமை தொடக்கம் 25 தினங்கள் பெருந்திருவிழா தொடர்ந்து நடைபெறும்.கொடியேற்றதினமான நேற்றைய

தினம் கோவிலின் பிரதான வாசலுக்கு நேராக உள்ள பருத்தித்துறை வீதியினூடாக கோவிலுக்கு செல்ல முயன்ற பக்தர்களை உட்செல்ல விடாது தடுத்தனர் பக்தர்கள் அந்த இடத்தில் நின்றவாறு வீதியில் கற் பூரங்கள் கொளுத்தி வழிபாடுகள் செய்து திரும்பினர்.

## தாயை இழந்த இளம் யுவதி தூக்கிட்டு தற்கொலை

காஞ்சிரங்குடா, சில்லிக்குடியாறு கிராமத்தைச்சேர்ந்த இளம் யுவதி ஒருவர் தனது தாயை இழந்த வேதனையால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சில்லிக்குடியாறு கிராமத்தைச் சேர்நத பாக்கியராசா மாலினி எனும் யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குறித்த யுவதியின் தாயார் மரணமடைந்திருந்ததாகவும், தான் தனது தாயை இழந்துள்ளதாகவும் அதனால் தானும் தற்கொலை செய்யப்போவதாக நீண்ட நாட்களாக கூறிவந்த நிலையில் அவர் தனது வீட்டு அறையினுள் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்ததாக ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவருகின்றது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவான சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்ப இடத்திற்கு சென்று சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸாரும் தடயவியல் பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




## பொதுப் போக்குவரத்து முழுமையாக இடைநிறுத்தப்பட்டது

சில தினங்களுக்கு முன்பு மதுரை அப்பல்லோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு சுவாசக் கோளாறு ஏற்பட்டதால் வென்டிலேட்டர் பொருத்தப்பட்டது. அவருக்கு வைத்தியர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்தனர்.

எனினும், நேற்று அவரது உடல் நிலை கவலைக்கிடமானது. வைத்தியர்கள் தொடர் சிகிச்சை அளித்து வந்த நிலையில் சுவாசக் கோளாறு காரணமாக மதுரை அப்பல்லோ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மதுரை ஆதீனத்தின் உயிர் பிரிந்தது.

தமிழகத்தின் மிகத் தொன்மையான சைவ சமயத் திருமடங்களில் ஒன்று மதுரை ஆதீனம். மதுரையில் அமைந்துள்ள இந்த ஆதீனம் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பு நாயன்மார்களில் ஒருவரான திருஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப்பட்டது.

மதுரை ஆதீனத்திற்கு நேற்று வரை 292 பேர் பீடாதிபதியாக இருந்துள்ளனர். 292வது பீடாதிபதியாக அருணகிரிநாதர் பொறுப்பில் இருந்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## திருக்கோவிலில் இருந்து காத்தான்குக்கு விற்பனைக்காக

அதிரடிப்படையினர் வெள்ளிக்கிழமை (13) பிற்பகல் கைது செய்துள்ளனர்..

கடற்படை புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினம் விசேட அதிரடிப்படை புலனாய்வு பிரிவினர் இவரைகண்காணித்து வந்த நிலையில் குறித்த நபர் வீட்டில் இருந்து மோட்டர்சைக்கிளில் கைக்குண்டு ஒன்றை மட்டக்களப்பு காத்தான் குடி பிரதேசத்தில் விற்பனைக்காக எடுத்துக்; கொண்டு பிரயாணித்தபோது அவரை பின் தொடர்ந்துள்ளனர்.

இதனையடுத்து களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்துக்கும் பொலிஸ் விடுதிக்கும் இடையிலான பிரதான வீதியில் பிற்பகல் 1.30 மணியளவில் புலனாய்வு பிரிவினர் பின் தொடர்வதை கண்டு; எடுத்துவந்த குண்டை அந்தபகுதியில் வீசி எறிந்துவிட்டு தப்பியோட முயற்சித்த போது அவரை விசேட அதிரடிப்படையினரும் புலனாய்வு பிரிவினரும் சுற்றிவளைத்து மடக்கி பிடித்து கைது செய்துள்ளதாக விசேட அதிரடிப்படையினரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் கைது செய்யப்பட்டவர் திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள விநாயகபுரத்தைச் சேர்ந்தவர் எனவும் சம்பவம் தொடர்பான விசாரணையை விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்துவருதாகவும் விசாரணையின் பின்னர் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளதாக அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

## கிழக்கில் நில ஆக்கிரமிப்புக்கு முஸ்தீபா

வனப்பகுதியில் உள்ள வனபாதுகாப்பு திணைக்களத்திற்கு முன்னால் உள்ள இந்த காட்டுப் பகுதிக்குள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சிலர் ஊடுருவி அங்கிருக்கும் பழமை வாய்ந்த மரங்களை வெட்டி விழ்த்தி தீயிட்டு எரித்துள்ளனர். இதனால் சுமார் 8 ஏக்கர் காடு அழிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றதுடன் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி இந்த சூத்திரதாரிகளை கண்டுபிடித்து சட்டத்துக்கு முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## றிஷாத் பதுர்தீனை விடுதலை செய்யக் கோரி ஒரு இலட்சம்

இக் கையெழுத்தினை அகிலங்கை மக்கள் காங்ரஸின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளரும் கிண்ணியா நகரசபை உறுப்பினருமான எம்.எம்.மஹ்தியினால் முன்னெ டுக்கப்பட்டன

நாடு முழுவதும் சுமார் ஓர் இலட்சம் கையெழுத்தினை மக்களிடமிருந்து பெற்று பாராளுமன்ற உப்பினர் றிஷாத் வதுர்தீனை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதிக்கு அனுப்பும் நோக்கில் இன்று கிண்ணியாவிலும் கையெழுத்து பெறப்பட்டது

அகிலங்கை மக்கள் காங்ரஸின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளரும் கிண்ணியா நகரசபை உறுப்பினருமான எம்.எம்.மஹ்தி கூறும் போது

கௌரவ றிஷாத் வதுர்தீன் கைது செய்யப்பட்டு 198 நாட்கள் கடந்து செல்கின்றன ஜனநாயகக் கட்சியின் தலைவர், சிறுபான்மைக் கட்சியின் தலைவர் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்ட போதிலும் எதிலும் அவர் குற்றவாளி என நிருபிக்கப் படவில்லை.

நாட்டின் சட்ட திட்டங்களுக்கு ஒத்துழைக்கின்ற ஜனநாயகக் கட்சியின் தலைவர் அவர் ஒரு முஸ்லிம் எந்தவொரு துரோகமும் செய்ய மாட்டார்.அவர் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்.

அவர் குடும்பமும் கஸ்டத்தின் விளிம்பில் இருந்து கொணடு இருக்கிறது.

அவரை விடுதலை செய்யக் கோரியேநாடளரீதியிலே ஓர் இலட்சம் கையெழுத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே ஜனாதிபதியும், பிரதமரும் அவருக்கு மன்னிப்பு வழங்கி கருணை அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் எனக் கூறினார்.

முன்னாள் அமைச்சர் றிஷாத் வதுர் தீன் அவர்களை தயவு செய்து ஜனாதிபதி அவர்கள் எந்த நிபந்தனையும் இல்லாமல் விடுதலை செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்

எந்தவித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப் படாததனால் அவர் விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி, மற்றும் பிரதமரிடம் கேட்டுக் கொள் கின்றேன்.

## படுகொலைகள் குவிந்த நாடாக இலங்கை

நடப்பதற்குரிய ஆணைகள் மேல் மட்டத்திலிருந்துதான் செல்ல வேண்டும். எனவே யுத்தக் குற்றங்களை செய்த சிப்பாய்களையோ இராணுவத்தினரையோ கோத்தபாய ஆட்சி தண்டிக்க விரும்பவில்லை. யுத்தக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டிருக்கி றார்களா என்றால் இல்லை என்றே பதில் கிடைக்கும்.

வடக்கு கிழக்கில் புத்திஜீவிகளை அழித்தவர்கள் அரசாங்கத்திற்கு பக்கபலமாக இருப்பதனால் அவ்வாறானவர்களை பொலிஸார் கண்டும் காணாமல் விட்டு விடுகிறார்கள். இவ்வாறு செல்கிறபோது நடுநிலையான அரசாங்கம், நடுநிலையான காவல்துறை, நீதி இருக்குமா என்ற கேள்வி ? சர்வதேசம் இலங்கையை நோக்கி கேட்கக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது.

நாட்டில் யுத்தம் ஆரம்பித்த காலத்திலிருந்து தமிழர்கள் என்பதற்காக அப்பாவிகள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். வீரமுனை படுகொலை, வந்தாறுமூலை பல்கலைக்கழக படுகொலை, சத்துருக்கொண்டான் படுகொலை, கொக்கட்டிச்சோலை படுகொலை, மயிலந்தனை படுகொலை, மகிழடித்தீவு, உடும்பன்குளம் படுகொலை, தங்கவேலாயுதபுரம் படுகொலை, புதுக்குடியிருப்பு படுகொலை என்று இப்படி எத்தனையோ படுகொலைகள் இடம்பெற்றிருக்கின்றது.

படுகொலைகள் அதிகரித்துக் காணப்படும் நாடாக இலங்கை காணப்படுகிறது.

பட்டப்பகலில் வீட்டில் இருந்து அழைத்து இழுத்துக்கொண்டு செல்லப்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். குழந்தைகள், வயோதிபர்கள், அங்கவீனர்கள் என எண்ணிலடங்காதோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். படுகொலைகள் இடம்பெற்ற காலத்தில் பொறுப்பாக பதவியில் இருந்தவர்களின் பெயர்கள், அதற்குரிய சாட்சியங்கள் கூட இருக்கின்றன. இவர்களெல்லாம் நீதியின் முன் நிறுத்தப்படாமல் பதவியுயர்வுகள், உயர்ந்த தராதரம் கொடுக்கப்பட்டு கௌரவத்திற்குரிய அதிகாரிகளாக பேணப்படுகின்ற ஒரு நிலையில், நீதியை உள்நாட்டு பொறிமுறையில் இருந்து எதிர்பார்ப்பதென்பது மிக மிக மிக கடினமாக இருக்கும். சர்வதேச பொறிமுறைதான் மனித உரிமை மீறல்களுக்கு தீர்வை தர முடியும் என்பது பொதுமக்களின் நம்பிக்கையாக இருக்கிறது என்றார்.

## யாழ். போதனாவில் நிரம்பி வழியும் கொரோனா தொற்றாளர்

எமது வைத்தியசாலை தற்போதைய நிலவரத்தின்படி வைத்தியசாலையின் விடுதிகள் மற்றும் அதி தீவிர சிகிச்சை பிரிவுகள் எல்லாமே கொரோனா நோயாளிகளால் நிரம்பியிருக்கின்றன. எங்களுக்குரிய மிகக் குறைந்த வளங்களுடன் எமது சேவைகளை நாம் முன் கொண்டு செல்கின்றோம். வைத்திய நிபுணர்கள் வைத்தியர்கள் தாதியர்கள் மிகுந்த நெருக்கடியை இதனால் சந்தித்து வருகின்றனர்.

அந்த வகையில் இங்கு கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை தீவிரமாக அதிகரித்து வருவதனால் வைத்தியசாலை மிகவும் இக்கட்டான கட்டத்தில் உள்ளது.

எமது கோப்பாய் இடைத்தங்கல் சிகிச்சை நிலையத்தில் 420 பேரை பராமரிக்கின்ற வசதிகளே இருந்தும் நேற்று 430 பேருக்கு மேல் அதிகமாக அனுமதிக்கப் பட்டிருக்கின்றனர்.

வைத்தியசாலைக்குத் தேவையான ஒக்சிஜன் சிலிண்டர்கள் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. நாங்கள் இதுவரை ஒக்சிஜன் சிலிண்டரை பெற்றுக் கொள்ள அனுராதபுரத்திற்கு மட்டுமே சென்றிருந்தபோதும் அங்கும் தட்டுப்பாடு உருவாக நேற்று முதல் கொழும்புக்கும் செல்லுகின்ற நிலை உருவாகியுள்ளது.

மேலும் வைத்தியசாலைக்கு விபத்து பிரிவிற்கு தினமும் 60 தொடக்கம் 80 பேர் வரையில் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

அவர்களுக்கும் எமது சேவையை வழங்குவதால் கோவிட் நோயாளர்களை கவனிப்பதிலும் நமக்கு சில சிரமங்களை எதிர்நோக்க வேண்டியதாக உள்ளது. எனவே இவற்றை குறைக்க வேண்டும் இவற்றை குறைப்பதற்கான ஒரே வழி தேவையற்ற நடமாட்டங்களை குறைக்கவேண்டும்.

அத்துடன் ஆடம்பரமான கொண்டாட்டங்கள் தேவையற்ற விழாக்களை மக்கள் தவிர்க்க வேண்டும்.

எமது இக்கட்டான நிலையை மக்களுக்கு அறிவிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.நாம் மீண்டும் கூறுவது என்னவென்றால் மக்களாகிய நீங்கள் தேவையற்று வெளியில் நடமாடாமல் சமூகப் பொறுப்புடன் சமூக இடைவெளியை பயன்படுத்தி சுகாதார நடவடிக்கைகள் இறுக்கமாக பேணுவது தான் வைத்தியசாலைக்கும் சமூகத்திற்கும் நீங்கள் செய்யும் ஒரே ஒரு நன்மையாக இருக்கும் என்றார்




## அரசாங்கத்திற்கு பெரிய எதிர்ப்பு இருக்கின்றது

உறுப்பினர் சி.சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு திராய்மடு சுவிஸ் கிராமத்தில் 1 கி.மீ பாதைக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அங்கு கருத்து தெரிவிக்கையில் ,

எமது நாட்டை பொறுத்தவரையில் தற்போது கொரோன தொற்று வீதம் அதிகரித்துக்கொண்டு வருகின்றது, இருந்தபோதும் மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தவரையில் பெரிய பாதிப்புகள் இல்லை, காரணம் அனேகமானோர் தடுப்பு ஊசிகளை ஏற்றி இருக்கின்றோம்.

மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்னும் 75 ஆயிரம் தடுப்பூசிகள் தேவைப்படுகின்றன. வீதிகளில் பணியாற்றுபவர்கள் கடைகளில் பணி புரிகின்றவர்கள் 18 வயதுக்கு குறைந்த பணியாளர்கள் தடுப்பூசிகளை ஏற்றினால் கணிசமான பிரச்சனைகள் மாவட்டத்தில் தீர்த்து வைக்கப்படும் இதனூடாக மரண வீதம் அதிகரிப்பதில் இருந்து தப்பிக் கொள்ள முடியும் .

மரண வீதம் அதிகரித்திருப்பது உண்மை, ஆனால் நாங்கள் சில வேலைத்திட்டங்களை தவிர்ப்போமானால் கிராமப்புறங்களில் வறுமை தலைதூக்க தொடங்கிவிடும், இன்றைய வீதி திட்டம் கூட இங்குள்ள கூலித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான ஒரு செயற்பாடக தான் இருக்கின்றது.

ஆனால் கிராம மட்டங்களில் உள்ள மீனவர்கள் விவசாயிகள் சாதாரண கூலித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பற்றி சிந்திக்காமல் இவ்வாறு சிலர் அரசாங்கம் மீது குறை கூறுகின்றனர் .

நாட்டு மக்கள் அனைவரும் மரணித்த பிறகு எதற்கு நாடு என்று சிலர் கேட்கிறார்கள், பொறுப்பு மிக்க அரசாங்கம் என்ற ரீதியில் தடுப்பூசிகளை விரைவாக செலுத்தி இருக்கின்றது. அதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமான மக்கள் தடுப்பு ஊசி ஏற்றி இருக்கின்றார்கள்.

உண்மையிலேயே கொரோனா தொற்று அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு பாரிய சவாலாக இருக்கின்றது. அதற்கும் முகம் கொடுத்து எமது மாவட்டத்தை பாதுகாத்து வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டிய முக்கிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

# முஸ்லிம் தனியார் சட்டத்தில் மேற்கொள்ளவுள்ள மாற்றங்கள் முஸ்லிம் இயக்கங்கள் அரசுக்கு விடுத்துள்ள வேண்டுகோள்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஸ்லிம் தனியார் சட்டத்தில் அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள மாற்றங்கள் தொடர்பாக முஸ்லிம் சமூகத்துடைய கருத்துக்களைப் பிரதிபலிக்கும் வகையில், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா, முஸ்லிம் கவுன்சில் ஒப் சிறிலங்கா, தேசிய சூரா சபை, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை, என்பன கூட்டாக இணைந்து அண்மையில் நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

1951ஆம் ஆண்டின் இலக்கம் 13ஐக் கொண்ட இலங்கை முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டமானது முஸ்லிம் தனியார் சட்டங்களின் ஒரு பகுதியையும் கொண்டுள்ளது. எந்தவோர் முஸ்லிம் நபரும் மீறிச் செயற்பட முடியாத, புனித குர்ஆனின் கட்டளைகள் தொடர்பான அம்சங்கள் அதனுள் உள்ளடக்கம் பெற்றுள்ளன.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் ஆயிரம் வருடங்களுக்கும் மேலான பூர்வீகத்தை இங்கு கொண்டுள்ளார்கள். இவர்கள் பின்பற்றிவரும் இவர்களது உரிமைகள் தொடர்பான விடயங்கள் தொடர்பான விடயங்களான விவாக விவாகரத்து, தாபரிப்பு, நன்கொடை, வாரிசுரிமை, முஸ்லிம் தர்ம நிதியம் உள்ளிட்ட பள்ளிவாசல்கள், பெரியார் அடக்கஸ்தலங்கள் மற்றும் இஸ்லாமிய விடுதி நிலையங்கள் யாவும் எமது நினைவுக்கப்பால் செல்லும் காலம் முதல் இந்நாட்டில் ஆட்சிபீடமேறிய ஆட்சியாளர்களின் ஒப்புதலையும் அங்கீகாரத்தையும் பெற்றே வந்துள்ளன.

இலங்கை அரசியல் யாப்பின் அடிப்படை உரிமைகள் மீதான அத்தியாயம் III இல் கூட சமய, நம்பிக்கை வழிபாடு, வணக்க வழிபாடு மற்றும் சமய போதனைகளைப் பின்பற்றல் போன்றவற்றுக்கான உரிமைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் இவ்வாறான உரிமைகள் யாவும் சர்வதேச ரீதியிலான பல உடன்படிக்கைகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனங்கள் ஊடாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன. மேலும், உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் இனரீதியான சிறுபான்மையின மற்றும் சமய ரீதியான மக்களால் பின்பற்றப்படும் சமய ரீதியான, கலாசார ரீதியான உரிமைகளையும் அவர்களது சமய வழிபாட்டுரிமைகளையும் மறுக்கப்படலாகாது ஒன்றும் இவ்வாறான சர்வதேச உடன்படிக்கைகள் ஏகோபித்த அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் தினேஷ் குணவர்தனவால் 2020 பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதியில் நடந்தேறிய மனித உரிமைகள் தொடர்பான 43ஆவது உயர்மட்ட கூட்டத் தொடரில் முன்வைக்கப்பட்ட அறிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு, இலங்கை நாடானது, பல்லின, பல மொழி, பல மத மக்களைக் கொண்டுள்ள நாடென்றும் அங்கு வாழும் சிறுபான்மையின மக்கள் அவர்களது சமய வழிபாட்டுரிமைகளையும், சமய போதனைகளையும் வெளிப்படுத்தப் பின்பற்றும் உரிமையினை உறுதி செய்து, ஏற்றுக் கொள்ள வேண்டியது மிக முக்கியமானதென்றும் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், ஓர் இன ரீதியான அல்லது சமய ரீதியான சிறுபான்மை மக்களின் உரிமைகளை ஆதரித்துப் பாதுகாப்பதானது குறித்த நாட்டின் அரசியல் மற்றும் சமூக ஸ்திரப்பாட்டுக்கு வழிவகுக்கும் என்பது தேசத்துவ அந்தஸ்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையொன்றாகும்.

இதன் பின்னணியில் உற்று நோக்கும் போது, இந்நாட்டில் அமுலிலுள்ள முஸ்லிம் சட்டத்தின் சில அம்சங்களையும் அல்லது நிறுவனங்களையும் தடை செய்வதற்கான அமைச்சரவை முடிவானது முஸ்லிம்களின் சமய வழிபாட்டுரிமையை நேரடியாக மீறும் செயலொன்றாகவே கருதப்படுகிறது. உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் ஏற்படக் கூடிய சமய, சட்ட சார்பு மற்றும் சட்டமுறைச் சிக்கல்களை,

குறிப்பாக, தடையால் ஏற்படக்கூடிய தேவையற்ற நிலைமைகளின் பின்னணியில், அமைச்சரவையின் இத் தீர்மானமானது மீளாய்வுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

தனியார் சட்டத்தை வேறுபடுத்திக் காட்டும் விதத்தில், தனியார் சட்டங்களின் பல்வேறுபட்ட கூறுகளை ஒன்றாகச் சேர்த்தவாறு அமையப்பெற்றுள்ள சட்ட முறையொன்றைக் கொண்டுள்ள ஒரு நாட்டில், அத்துடன் ஒரு சிறுபான்மையினம் தொடர்பான இவ்விடயத்தில், குறித்த தனியார் சட்டத்தின் கீழ் வரும் சில அம்சங்கள் மற்றும் அல்லது நிறுவனங்கள் மீதான தடையானது குறித்த இனக்குழுவினரை உள்ளூரில் மாத்திரமல்லாமல் சர்வதேச ரீதியாகவும், அடக்கியொதுக்கும் மற்றும் அல்லது தனிமைப்படுத்தும் செயலொன்றாகவே தோன்றுகின்றது.

முஸ்லிம் விவாக விவாகரத்துச்சட்டத்தில் உள்ள (MMDA) பல விடயங்களில் மாற்றங்கள் / திருத்தங்கள் தேவைப்படுகின்றதென்பதையும் அவற்றுக்கு முஸ்லிம் சமூகம் முழுமனதுடன் ஆதரவைத் தெரிவிப்பதையும் நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அதேவேளை, மாற்றங்கள் /திருத்தங்கள் என்ற போர்வையில் குறித்த சில விடயங்களை /நிறுவனங்களை இல்லாதொழிப்பதை அல்லது தடை செய்வதை முஸ்லிம் சமூகம் எதிர்த்து நிற்கின்றது. ஏனெனில், அவ்வாறான செயற்பாடு புனித குர்ஆன் எடுத்தியம்பும் அம்சங்களை மீறுவதாகும். முன்மொழியப்பட்டுள்ள வழிமுறையானது, மாறாக, முஸ்லிம் சட்டத்தில் உள்ள குறித்த அம்சங்கள் மற்றும் அல்லது நிறுவனங்கள் என்பவற்றில் ஏற்படக்கூடிய துஷ்பிரயோகங்களைத் தவிர்த்து, ஒரு சமநிலையை ஏற்படுத்த கூடிய மிகவும் பொருத்தமான ஏற்பாடுகளைக் கொண்டு வருவதாகும்.

அதேவேளை, ஒரு சட்டம் என்ற வகையில், முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தில் (MMDA) மாத்திரம் அல்லது ஊழல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் நடந்தேறியுள்ளதென்பதையும் நாம் இங்கு மனதில் கொள்ள வேண்டும்.

எனவே, தனியாக ஒரு குறித்த சட்டத்தை மாத்திரம் இலக்கு வைத்து செயற்படுவதானது பல உள்நோக்கங்களை அடிப்படையாக வைத்தவாறு செயற்படுகின்றது என்பதையும் பொருள்படுத்துகின்றது. அத்துடன் அவ்வாறான செயற்பாடானது, முஸ்லிம்களின் அடிப்படை சமய உரிமைகளையும் மிகமோசமாக மீறக்கூடியதாகவும் அமைகின்றது எனவும் தெரிவித்துள்ளனர்.

## இறக்காமம் வாங்காமத்தில் கோரோனா மையவாடி அடுத்த கட்ட நகர்வை ஆரம்பித்துள்ள அதிகாரிகள்



(நூருல் ஹுதா உமர்)

கோவிட் தொற்றினால் உயிரிழப்போரின் உடல்கள் மட்டக்களப்பு - ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்டு வரும் நிலையில் அங்கு இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.இவ் இடப்பற்றாக்குறையை கருத்திற் கொண்டு அம்பாறை மாவட்டத்தில் இறக்காமம் பிரதேசத்தில் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ள இடத்தினை தயார் செய்யும் வேலைகள் இடம்பெற்று வருகின்றது.

ஓட்டமாவடி மஜ்மா நகரைத் தொடர்ந்து இறக்காமம் வாங்காமம் பிரதேசத்தில் இனம் காணப்பட்டுள்ள பகுதியில் 05 ஏக்கர் நிலப்பரப்பு இதற்காக தெரிவு செய்யப்பட்டிருட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மஜ்மா நகரில் கோவிட் தொற்றினால் உயிரிழப்போரின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டு மையவாடி பூர்த்தியான பின்னர் இறக்காமம் கொரோனா மையவாடியில் அடக்கம் செய்வது தொடர்பில் கூடிய அவதானம் செலுத்தப்பட்டு அதற்கான ஆரம்பகட்ட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கமைவாக கோவிட் தொற்றினால் உயிரிழப்போரின் உடல்கள் அடக்கம் செய்ய தெரிவு செய்யப்பட்டுள்ள இறக்காமம் வாங்காமம் பிரதேசத்தில் இனம் காணப்பட்டுள்ள பகுதிக்கு நேரடி கள விஜயம், இறக்காமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஷீல் அவர்கள் தலைமையில் இடம்பெற்றது.

கள விஜயத்தினைத் தொடர்ந்து கொரோனா மையவாடி முன்னேற்பாடுகள் தொடர்பில் ஆராயும் ஒன்றுகூடல் இறக்காமம் பிரதேச சபை தவிசாளர் எம்.எஸ். ஜமீல் காரியப்பர் அவர்களின் ஏற்பாட்டில் பிரதேச சபையில் இடம்பெற்றது. இந்த கலந்துரையாடலில் இறக்காமம் பிரதேச சபை உப தவிசாளர் அஷ்ஷெய்க் ஏ.எல். நௌபர், அக்கரைப்பற்று மாநகர உறுப்பினரும் அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளனத் தலைவருமான எஸ்.எம். ஷபீஸ், இறக்காமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.வை. ஜௌபர், பிரதேச சபை உறுப்பினர் என்.எம். ஆஷீக், பிரதேச சபை செயலாளர் எம்.ஏ. இர்பான், நில உத்தியோகத்தர் எம்.எல். மாஹிர், அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல். ஆஹிர், உளவள ஆலோசனை உத்தியோகத்தர் ஏ.எச். றகீப் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் ஓட்டமாவடி பகுதியில் கோவிட் தொற்றினால் உயிரிழந்த பல்லினத்தையும் சேர்ந்த 1500க்கு மேற்பட்டோரின் உடல்கள் இதுவரை அடக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அக்கரைப்பற்றில் வீதி அபிவிருத்தி திட்டங்கள் முதல்வரினால் அங்குரார்ப்பணம்!







(நூருல் ஹுதா உமர்)

அரசின் ‘சுபீட்சத்தின் நோக்கு’ ஒரு இலட்சம் வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று ஹிஜ்ரா வீதி மற்றும் பதூர் பள்ளி கிழக்கு வீதிகளின் அபிவிருத்தி நிர்மாண பணிகள் அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகியின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற அதிபரும், மாநகர சபை உறுப்பினருமான எம்.ஐ.எம்.சஹாப்தீன், அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் ஏ.கே.பாஹிம், வட்டார முக்கியஸ்தர்கள் மற்றும் உலமாக்கள் கலந்து கொண்டனர்.

## ஆலயங்கள் தோறும் அறநெறிப்பாடசாலை திட்டத்தின்கீழ் அட்டப்பள்ளத்தில் அறநெறிப்பாடசாலைக்கு அடிக்கல்!







(வி.ரி.சகாதேவராஜா)

‘ஆலயங்கள் தோறும் அறநெறிப்பாடசாலை’ என்ற திட்டத்தின்கீழ் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாடளாவியரீதியில் அறநெறிப் பாடசாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர்பிரதேசத்திலுள்ள அட்டப்பளம் விநாயகர் அறநெறிப்பாடசாலைக்கான கட்டிடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது.

அட்டப்பள்ளம் ஸ்ரீ சிங்காரபுரமாரியம்மன் ஆலய வளாகத்தில் ஆலய தலைவர் திரு த.கோபாலன் தலைமையில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட இந்துசமய கலாசார அலுவலர் கு.ஜெயராஜியின் ஒழுங்கமைப்பில் இந்நிகழ்வு சுகாதார நடைமுறைவிதிகளுக்கமைவாக நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார்.

இந்துசமயகலாசாரஅலுவல்கள் திணைக்களம் வழங்கிய 2லட்சருபா நிதியுடன் கிராம மக்கள் சேகரித்த இரண்டுலட்சருபா நிதியும் அங்கு அலயநிருவாகத்திடம் கையளிக்கப்பட்டது. அமரர் அகிலேசிள்ளை குடும்பத்தினர் 1லட்சருபா நிதியை கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் நிந்தவூர் பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பிரதேசசபை உறுப்பினர்கள் கலாசார உத்தியோகத்தர்கள் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## கோவிட் 19 விழிப்புணர்வுக்காக தம்பலகாமம் பிரதேச சபை வியாபார சங்கத்தினருடன் கலந்துரையாடல்

(இஃஜாஸ் ஏ பரீட்)

கொவிட் 19 விழிப்புணர்வுக்காக தம்பலகாமம் பிரதேச சபையினர் அப்பகுதி வியாபார சங்த்தினர்களுடன் சந்தித்து கலந்துரையாடல் ஒன்று வியாழக்கிழமை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஆஷியன் பௌண்டேஷன் நிறுவனத்தினர் ஒழுங்கு செய்த இந் நிகழ்வுக்கு தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் ஏ.ஜீ.சம்பிக பண்டார தலைமை வகித்தார்.

இதன் போது கொவிட் 19 காலத்தில் பொது மக்களுக்கு உதவுவது மற்றும் வியாபார சங்கங்கள் மூலம் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இந் நிகழ்வில் ஆஷியன் பௌண்டேஷன் உறுப்பினர்கள் பிரதேச சபை உறுப்பினர்கள் வியாபார சங்க அங்கத்தினர்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## கிரானில் போதைப்பொருளுடன் இருவர் கைது

(ந.குகதர்சன்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரான் பிரதேசத்தில் வைத்து போதைப்பொருள் சில்லறை வியாபாரி ஒருவர் உட்பட இருவர் 2 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் இன்று 2021.08.13ம் திகதி மாலை 07.30 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் ஏறாவூர், மீராக்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 19, 21 வயதுடைய இளைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய வாழைச்சேனை பொலிசஸாரோடு இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இவர்கள் இருவரும் போதைப்பொருளுடன் வசமாக மாட்டின் கொண்டுள்ளனர்.

இவர்கள் மிக நீண்ட நாட்களாக ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பிரதேசங்களில் போதைப்பொருள் சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதுடன், இன்றைய தினமும் வியாபார நோக்கில் போதைப்பொருளை வாழைச்சேனைப் பிரதேசத்துக்கு கடத்தி வந்துள்ளமை முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. அத்தோடு, போதை பொருளை கடத்தி வருவதற்காக பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது. கொரோனா கோரத்தாண்டவத்திற்கு உச்ச நிலையை அடைந்துள்ள நிலையில் உயிரச்சுறுத்தலுக்கும் மத்தியில் வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் போதைப்பொருள் ஒழிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றமை பாராட்டுக்குரியது.



SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரம் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# வாகரையில் இதுவரை 11550 பேருக்கு முதலாவது கொரோனா தடுப்பூசி

வாகரை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் வெள்ளிக்கிழமை வரைக்கும் முதலாவது கொரோனா தடுப்பூசி 11550 நபர்களுக்கு ஏற்றப்பட்டுள்ளதாக வாகரை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யோ.விவேக் தெரிவித்தார்.

வாகரை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் முப்பது வயதிற்கு மேற்பட்ட பொது மக்களுக்கு முதலாவது மற்றும் இரண்டாவது கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணிகள் வாகரை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யோ.விவேக் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

இந்தவகையில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முப்பது வயதிற்கு மேற்பட்ட பொது மக்களுக்கு முதலாவது மற்றும் இரண்டாவது கொரோனா தடுப்பூசிகள் வட்டவான் கலைமகள் வித்தியாலயம், வாகரை மற்றும் ரிதிதென்னை பாடசாலை கட்டடம் ஆகியவற்றில் ஏற்றப்பட்டது.

கொவிட் 19 தடுப்பூசி ஏற்றும் நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யோ. விவேக், பொதுச் சுகாதாரபரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு படையினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வாகரை சுகாதார வைத்திய அதிகாரி


(ந.குகதர்சன்)

அலுவலக பிரிவில் வெள்ளிக்கிழமை வரைக்கும் முதலாவது கொரோனா தடுப்பூசி 11550 நபர்களுக்கும், இரண்டாவது கொரோனா தடுப்பூசி 896 நபர்களுக்கும் ஏற்றப்பட்டுள்ளதாக வாகரை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யோ.விவேக் தெரிவித்தார்.

# கிண்ணியா காக்காமுனை அப்துல் ஹமீது வித்தியாலய வகுப்பறைக் கட்டிடம் திறந்து வைப்பு

(எப்.முபாரக்)



திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். தௌபீக்கின் வழிகாட்டலில் கிண்ணியா நகர சபை உறுப்பினர் ஏ.எம். நிவாஸ் அவர்களினூடாக கிண்ணியா பிரதேச சபைத் தவிசாளர் கே.எம். நிஹார் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க முஸ்லிம் ஹேன்ட்ஸ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் காக்காமுனை அப்துல் ஹமீது வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டிடம் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கினால் திறந்து வைக்கப்பட்டது.

இதன் போது பாடசாலையில் காணப்படும் குறைநிறைகளையும் பாராளுமன்ற உறுப்பினர்,பாடசாலை கேட்டறிந்து கொண்டார்.

இந்நிகழ்வில் திட்டப் பணிப்பாளர் இல்முதீன், பாடசாலை அதிபர் முகம்மது சாலிஹ் ராஜி, கோட்டக் கல்வி அதிகாரி ஏ.நஸார், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# 750,000 பெறுமதியான மருத்துவ மற்றும் மருத்துவம் சாரா உபகரணங்கள் பெரன்டினா நிறுவனத்தால் வழங்கி வைப்பு

(வி.சுகிர்தகுமார்)

தொண்டு நிறுவனங்களும் கொவிட் அவசர கால இடர்முகாமைத்துவ உதவி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.இதன் அடிப்படையில் பெரண்டினா நிறுவனம் அதன் கொவிட் 19 அவசரகால இடர்முகாமைத்துவ உதவித்திட்டத்தின் கீழ் பல உதவிச் செயற்பாடுகளை மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டம் உள்ளடங்களாக 9 மாவட்டங்களில் இயங்கிவரும் சிறுவர், முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பராமரிப்பு இல்லங்களுக்கும், கொவிட் 19 சிகிச்சை மற்றும் பராமரிப்பு நிலையத்திற்கும், வருமைக்கோட்டிற்குற்பட்ட தனது பயனாளிகள் குடும்பங்களுக்கும் மாவட்ட செயலகங்கள் மற்றும் அரச திணைக்



களங்களுடன் இணைந்து வழங்கி வருகின்றது.

இச்செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக மட்டக்களப்பு பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின்கீழ் இயங்கி வரும் கரடியனாறு மற்றும் வாகரை பிரதேசத்தில் இயங்கிவரும் கொவிட் 19 சிகிச்சை மற்றும் பராமரிப்பு நிலையத்திற்கு உடனடி தேவையான ரூபா. 750,000 பெறுமதியான மருத்துவ மற்றும் மருத்துவம்சாரா உபகரணங்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி தலைமையில் இடம்பெற்ற உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வில் , மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அச்சுசுதன் கலந்து கொண்டு வைத்திய உபகரணங்களை கையேற்றார்.

நிகழ்வில் பெரண்டினா நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் எஸ். விஜணீந்தன் பிரதேச முகாமையாளர் மற்றும் சமூக அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்கள் கிளை உத்தியோகத்தர்கள் என சிலர் கலந்துகொண்டனர்.

# உலமாக்களுக்கான உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு

(எப்.முபாரக்)



பிரதமரும் கலாச்சாரபன்னாட்டு அலுவலக அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டலினூடாக திருகோணமலை மாவட்ட பாராளமன்ற உறுப்பினர் கபில நுவான் அதுகொரல அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏசிஎம். ஜவாஹிர் அவர்களினால் கிண்ணியா உலமா சபை காரியாலயத்தில் கிண்ணியா, மூதூர் பிரதேச அரபுக்கல்லூரிகளில் பனியாற்றும் உலமாக்களுக்கு உலருணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

நாட்டின் தற்போதைய அசாதாரணமான சூழ்நிலையில் நீண்டகாலமாக வருமானமில்லாமல் அரபுக்கல்லூரிகளில் பனியாற்றும் உலமாக்களை இனங்கண்டு இவ்உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

எதிர்காலத்தில் மாவட்டத்தின் எனைய பகுதிக்கும் வழங்குவதாகவும் பிரதேச சபை உறுப்பினர் ஏசிஎம்.ஜவாஹிர் இதன் போது தெரிவித்தார்

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அதுகொரல அவர்களின் பித்தியோக செயலாளர் வாலுக்க, பொது ஜன பெரமுன அமைப்பாளர் முஹம்மது உவைஸ், முபாரக், உலம சபை தலைவர் மற்றும் உலமாக்கள் பலரும் கலந்து கொண்டார்கள்.

# மருதமுனை ம்ஸ் தேசிய பாடசாலையின் புதிய அதிபராக எம்.எம்.ஹிர்பஹான் கடமையேற்றார்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை கமு / ஷம்ஸ் தேசிய பாடசாலையின் புதிய அதிபராக இக்கல்லூரியின் பழைய மாணவரும், பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபருமான எம்.எம்.ஹிர்பஹான் (இலங்கை அதிபர் சேவை தரம்-1) இன்று முதல் பாடசாலையின் அதிபர் பொறுப்பை கடமையேற்றார். பாடசாலையில் அதிபராக கடமையாற்றிய ஏ.எல்.சக்காப் ஓய்வு பெற்றுச் செல்வதை அடுத்து, இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாடசாலையின் புதிய அதிபரிடத்தில் கடமை பொறுப்புக்களை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு (12) பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவரும் யாழ் மாவட்ட உயர் நீதிமன்ற நீதிபதியுமான ரி.எல்.அப்துல் மனாப், ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் எம்.எம்.முஸர்ரப் உட்பட பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

புதிய அதிபர் எம்.எம்.ஹிர்பஹான், கல்வித்துறையிலும், கணினித்துறையிலும் பல பட்டப்படிப்புகளை பூர்த்தி செய்துள்ளார். மருதமுனை அல் - மனார் மத்திய கல்லூரியில் மூன்று வருடங்கள் அதிபராகக் கடமையாற்றிய



இவர், பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தனது கலைமானி பட்டப்படிப்பினை 1994 ஆம் ஆண்டு பூர்த்திசெய்த இவர் 1994.10.03 ஆம் திகதி பட்டதாரி ஆசிரியராக அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியில் முதல் நியமனம் பெற்றார். பின்னர் 1995 -10-04ஆம் திகதி ஒலுவில் அல் - ஹம்றா மகா வித்தியாலத்திற்கு இடமாற்றம் பெற்று கடமையாற்றியதுடன், 1997.01.10 ஆம் திகதி மருதமுனை அல் - மனார் மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றார்.

2004 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட கன்னங்கரா விருதைப் பெற்றுக்கொண்ட இவர் முழுத் தீவுக்குமான சமாதான நீதவானாக கடமையாற்றி வருவதுடன், அகவிழி எனும் கல்வி சஞ்சிகையில் ஆக்கங்களை எழுதிவருகின்றார்.

1997 ஆம் ஆண்டு பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் சிறப்புச் சித்தியும், 2000 ஆம் ஆண்டில் கணினி விஞ்ஞான டிப்ளோமாவில் சிறப்புச் சித்தியையும், 2009 ஆம் ஆண்டில் கல்வி முதுமாணிக் கற்கை நெறியையும் 2020 ஆம் ஆண்டில் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறியையும் பூர்த்திசெய்து தனது உயர் கல்வித் தகைமைகளை அதிகரித்துக்கொண்டார்.

அதிபர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த இவர் 20210.02.10 திகதி முதல் (SLPS-11) சேவையில் உள்ளீர்கப்பட்டார். 2014.01.06 ஆம் திகதி மருதமுனை அல் -மனார் மத்திய கல்லூரியின் அதிபர் பொறுப்பேற்று, அதன் கல்வி மற்றும் பௌதீக வள அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றினார்.

2016.02.10 திகதி அதிபர் சேவை தரம் 1 க்கு பதவி உயர்வும் பெற்றுக்கொண்ட இவர் அல்மனார் மத்திய கல்லூரியிலிருந்து எதிர்பாராத விதமாக பல நெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். கல்விப்புலத்தில் மிகச் சிறந்த ஆளுமை மிக்கவராக திகழ்ந்த இவர் இப்பாடசாலையிலிருந்து வெளியேறினார்.

இன்னிலையில் தான் கல்வி கற்ற மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் 2016.08.13 ஆம் திகதி முதல் பிரதி அதிபராக நியமிக்கப்பட்டார். பெரும் மனம் கொண்டு இதனை ஏற்றுக்கொண்ட இவர் தற்போது, இங்கு அதிபராகக் கடமையாற்றிய ஏ.எல்.சக்காப் 2021.08.13 ஆம் திகதி ஓய்வுபெற்றுச் செல்வதால் அக்கல்லூரியின் புதிய அதிபர் பொறுப்பை எம்.எம்.ஹிர்பஹான் ஏற்றுக் கொண்டு அதிபர் ஆசனத்தில் அமர்ந்தார். இதன் மூலம் மருதமுனை அல்- மனார் மற்றும் ஷம்ஸ் தேசிய பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளுக்கும் அதிபராக சேவையாற்றியவர் என்ற பெருமைக்குரியவராகவும் மாறினார்.

# ஓடிச் சென்று ஆற்றில் குதித்த இளைஞன் சடலமாக மீட்பு

(வவுணதீவு எஸ்.சதீஸ்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேசதிலுள்ள பெண்டுகள்சேனை ஆற்றில் குதித்ததில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ள பரிதாப சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை (13) இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெண்டுகள்சேனை, பூலாக்காடு பகுதியிலுள்ள வயல் பகுதியில் மண் ஏற்றச் சென்றபோது வயல் பகுதியில் நின்றோர் மண் ஏற்றியவர்களை துரத்தியபோது குறித்த இளைஞன் ஓடிச் சென்று அருகிலுள்ள ஆளமான ஆற்றில் குதித்துள்ளார். ஆற்றில் குதித்தவர் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவருகின்றது.

உயிரிழந்தவர் கிரான் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய குலேந்திரன் இந்திரன் எனவும் தெரியவருகின்றது.சம்பவ இடத்திற்கு பொலிஸார் சென்று இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஒரு இலட்சம் கிலோ மீட்டர் வேலைத்திட்டம் கல்குடாவிலும் ஆரம்பம்

(ந.குகதர்சன்)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்தின் ஓர் அங்கமான ஒரு இலட்சம் கிலோ மீட்டர் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புகுழுத் தலைவருமான அல்ஹாபில் நசீர் அஹமட்டின் முயற்சியின் பலனாக கிராமிய வீதி அபிவிருத்தி மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக பிரிவில் மூன்று வீதிகளின் வேலைகள் நேற்று (வியாழக்கிழமை) மாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்தவகையில் வாழைச்சேனை செம்மண்ணோடை ஹாஜியார் வீதி இரண்டு கோடியே முப்பத்தெட்டு இலட்சம் நிதி ஒதுக்கீட்டிலும், வாழைச்சேனை பிறைந்துறைச்சேனை அஸ்கர் பாடசாலை வீதி அறுபத்தாறு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும், வாழைச்சேனை மீன்பிடி சங்க வீதி இருபத்தெட்டு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலுமாக மூன்று வீதிகள் காபட் வீதிகளாக புனரமைப்பு செய்வதற்கான வேலைத் திட்டங்களை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புகுழுத் தலைவருமான அல்ஹாபில் நசீர் அஹமட் ஆரம்பித்து வைத்தார்.



இந்நிகழ்வில் ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர்களான எம்.அன்வர், ஏ.எல்.எ.கபூர், எஸ்.ஐ.எம்.இம்தியாஸ், எம்.அஸ்மி, எம்.தையூப், ஏறாவூர் நகரசபை முன்னாள் தவிசாளர் எம்.ஐ.தஸ்லிம் மற்றும் ஊர் பிரமுகர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் முக்கியஸ்தகர்களும் கலந்து கொண்டனர்.

# நாக சதுர்த்தியில் நாககாளியம்பாள் ஆலயத்தில் யாகபூஜை

வி.ரி.சகாதேவராஜா

நாகசதுர்த்தி தினத்தையொட்டி பனங்காடு நாககாளிஅம்பாள் ஆலயத்தில் மாபெரும் யாக பூஜை நேற்று நடாத்தப்பட்டது.

நாட்டில் கொரோனா தீநுண்மியின் தாக்கம் அகல வேண்டும்.இக்கொடிய நோயிலிருந்து நாட்டு மக்கள் முற்றுமுழுதாக விடுபடவேண்டும் எனக்கோரி தவிசாளர் ஜெயசிறிலின் நலன் வேண்டியும் அருளாசி வேண்டி இவ்வயாகம் சமூக செயற்பாட்டாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் குடும்பத்தினரால் நடாத்தப்பட்டது.

ஆலய பிரதம பூசகர் நடராஜா நாகராஜா இவ் யாகபூஜையை தலைமைதாங்கி சிறப்புறநடாத்தினார்.

ஆலையடிவேம்புப்பிரதேசத்திலுள்ள இவ்வாலயத்தின்



ஆலயத்தலைவர் கே.நடராஜாவின் முன்னிலையில் யாகம் நடைபெற்றது.சுகாதாரமுறைப்படி குறைந்த பக்தர்கள் இதில் கலந்துகொண்டனர்.

# இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வு

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் கதையாடல் 6 நிகழ்வு 15.08.2021 ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வேடதாரி 2 அரங்கிற்கான இதழ் என்னும் விடயத்தில் எழுத்தாளர் வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் இயல்வாணன் சு.ஸ்ரீகுமரன் (இயல்வாணன் ) கதையாடவுள்ளார் .

வாழ்த்துரையினை திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யாழ்கல்விவலய நாடகமும் அரங்கியலும் ஆசிரிய ஆலோசகர் ஜோ.ஜோன்சன் ராஜ்குமார் ஏற்புரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் வழங்கவுள்ளார்கள்.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 7631031 5979 கடவுச்சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# சிரேஷ்ட சட்டத்தரணி பேரின்பராஜா இன்றில்லை!

## கல்முனையின் பிரபல சட்டத்தரணி பேரின்பராசா கொரோனாவுக்கு பலி, அவர் நினைவாக இப்பதிவு



"தோன்றிற் புகழோடு தோன்றுக.." என்ற வள்ளுவன் வாக்கிற்கமைவாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பிரபல சமுகசேவையாளர் கிழக்குப்பிராந்தியத்தின் பிரபல சிரேஸ்ட சட்டத்தரணி எம்.கே.பேரின்பராஜா நேற்றுமுன்தினம் இறைபதமடைந்தார்.

சட்டப்புலத்தில் பலராலும் நன்கு அறியப்பட்ட மூத்தம்பி கந்தையா பேரின்பராஜா செட்டிபாளையத்தை பிறப்பிடமாகவும் கல்முனையை வதிவிடமாகவும் கொண்டவர்.

ஒரு சட்டத்தரணியாக மட்டுமல்லாது பொதுநலசேவைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட திரு.பேரின்பராஜா பழகுவதற்கு இனிமையான சுபாவம் கொண்டவர்.

சிரேஷ்ட சட்டத்தரணி எம் கே.பேரின்பராஜா கொரோணா நோய் தாக்கத்தால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் காலமானார். மரணிக்கும்போது அவருக்குவயது 69.

செட்டிபாளையத்தில் மூத்தம்பி கந்தையா தம்பதியினருக்கு 1951இல் பிறந்த அவர்



ஆரம்பத்தில் செட்டிபாளையம் மகாவித்தியாலயத்தில் பயின்று பொலிஸ் திணைக்களத்தில் உபபொலிஸ் பரிசோதகராக பணியாற்றினார்.

பின்னர் சட்டக்கல்லூரியில் பயின்று சட்டத்தரணியானார். 36 வருடகால அனுபவம் கொண்ட அவர் பலமுன்னணி வழக்குகளில் தோன்றியவர்.

சட்ட உலகில் சமகாலத்தில் பிரகாசித்துக்கொண்டிருக்கின்ற ஜனாதிபதி சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன் எஸ்.புவிதரன் உள்ளிட்ட பலரோடு உன்றாக பயின்று வெளியேறியவர் இவர். நீதிபதி இளஞ்செழியனுடன் மிகுந்த தோழமையுடன் உரிமையுடன் பழகியவர்.

இவர் குற்றவியல் மற்றும் குடியியல் வழக்குகளில் கூடுதலாக ஆஜராகி பெயர்பெற்றவர். கல்முனை மட்டக்களப்பு அக்கரைப்பற்று முல்லைத்தீவு போன்ற பல நீதிமன்ங்களில் வாதாடி பல முக்கிய வழக்குகளில் வெற்றிபெற்று சாதனை படைத்தவர். இடைக்காலத்தில் முல்லைத்தீவு நீதிமன்றிற்கு நீதிபதியாகச் செல்லும் நியமனமும் கிடைத்ததது. ஆனால் அவர் அதனைபொறுப்பேற்கவில்லை. எனினும் பதில் நீதிவானாக கல்முனை அக்கரைப்பற்று நீதிமன்றங்க்ளில் பயணியாற்றியருந்தமையும் இவ்வண் குறிப்படலாம்.

ஆலய வழக்குகளில் பேசி வெல்வதில் அவருக்கு நிகர் அவரே எனலாம். வரலாற்றுப் பிரசித்திபெற்ற உகந்தமலை முருகனாலய வழக்குபொத்துவில் நீதிமன்றத்தில் பலவருடகாலமாக இழுபட்டுவந்தது. அதனை குறுகிய காலத்தில பொறுப்பேற்று ஆலயத்திற்கு சர்பாக வெற்றிபெற்று ஒப்படைத்ததை அண்மைய சாதனையாக கருதலாம். அவருடன் கனிஸ்சட்டத்தரணியாகவிருந்து இன்று முன்னணி சட்டத்தரணியாக இருக்கின்ற நடராசா சிவரஞ்சித் அதற்கு சாட்சி.

சட்டத்தரணி நடராசா சிவரஞ்சித் 2013இல் மறைந்த பேரின்பராஜாவுடன் இணைந்து கனிஸ்ட சட்டத்தரணியான பயிற்சிபெற்றவர்.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் புகழ் பூத்த சிரேஷ்ட சட்டத்தரணியும். சமூக செயற்பாட்டாளராகவும் திகழந்து கிழக்கு மாகாண சட்டத்தரணிகள் சங்கத்தின் வலயத்தலைவராகவும் பணியாற்றியவராவார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஆலோசனை கவுன்சில் உறுப்பினராகவும் பல பொது நல அமைப்புகளில் முக்கிய பங்கெடுத்தவராவார். கல்முனை றோட்டரிக்கழகத்தின் முக்கிய பதவிவகித்த அவர் பலசமுகசேவைகளில் முன்னின்று பணியாற்றினர்.

சிஎச்ஆர்டி நிறுவனத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றிய அவர் பல வங்கிகளுக்கு குழுநிலை சட்டத்தரணியாக இறுதிவரை கடமையாற்றிவந்திருந்தார்.

இவர் கல்விப் புலத்தில் அதிசிறந்த ஆசிரியையும். புகழ் பூத்த பேசும் அதிபராக திருமதி அன்னபூரணம் அம்மணியின் கணவராவார். மண்டுரை பிறப்பிடமாக்கொண்ட அதிபர் அன்னபூரணம் இறுதியாக கல்முனை இ.கி.மி.மகாவித்தியாலயத்தில் அதிபராகவிருந்து ஓய்வுபெற்றவர். இவர்களுக்கு இரண்டு புதல்வர்கள் உள்ளனர். பவானுஜன் அனோஜன் . இருவரும் கல்முனை பற்றிமா கல்லூரியின் பயின்று சிற்நத பெறுபேறுகளைப்பெற்று பொறியியலாளராக உள்ளனர்.

கல்முனை ரெலிகொம் நிறுவனப் பொறியலாளராவும் மகாராஜா கபிற்றல் நிறுவன பொறியிலாளராகவும் இருவரும் தற்சமயம் தொழில் செய்கின்றனர்.

அவர் பிறந்த செட்டிபாளையத்தை மறக்காமல் பல பணிகளை அங்குசெய்தவர். செட்டிபாளையம் மகாவித்தியாலய வைரவிழாக்குழுவிலும் கலந்துகொண்டு பாடசாலை அபிவிருத்திப்பணிகளில் பங்கேற்றவர்.

கல்முனையில் சஞ்சீவன் கொலைவழக்கு உள்ளிட்ட பல மனிதஉரிமை வழக்குகளில் ஆஜராகி பிரபல்யமடைந்தவர். கொழும்பிலிருந்து பிரபல சட்டத்தரணி எஸ்.ரத்னவேல் அவர்களை வரவழைத்து பாண்டிருப்பில் புதைக்கப்பட்ட சஞ்சீவனின் உடலத்தை மீண்டும் தோண்டிஎடுத்து சோதனை செய்யவும் நீதியைப் பெற்றுக்கொடுக்கவும் காரணமாகவிருந்தவர். அச்சமயம் பத்திரிகையாளராக அத்தனை சம்பவங்களிலும் கலந்துகொண்டது இன்றும் என்கண் முன் நிழலாடுகின்றது.

சட்டத்தரணியாக மட்டுமன்றி சமுகசேவையாளராகவும் அவரை இத்தருணத்தில் நினைவு கூர்தலின்மூலம் அவரது சேவையை உலகுக்கு எடுத்தியம்புவதோடு மேலும் பல சேவையாளர்களை உருவாக்கலாம் என்பதால் இப்பதிவு .

ஆம் அவரது அந்த தீர்க்க தரிசனப்பார்வை அதாவது தனக்குப்பின் தரமான சட்டத்தரணிகள் தான்சார்ந்த சமுகத்தில் மிளிரவேண்டும் என்ற உன்னத நோக்கு உண்மையில் இன்று சட்டத்தரணி சிவரஞ்சித் போன்றவர்கள் உருவாகி சட்டத்துறையில் கொடிகட்டிப்பறந்தவருவதும் நிதர்சனமாகிவருகிது என்பதை நினைக்கின்ற போது அவரையிட்டு நெஞ்சம் தாழாதிருக்கிறது.

'விட்டுக்கொடுத்தவர்கள் கெட்டுப்போவதில்லை' 'கெட்டுப்போனவர்கள் விட்டுக்கொடுத்ததில்லை' என்பார்கள். அதுபோல விட்டுக்கொடுத்து அனைவரையும் கட்டிஆள்வதில் அவருக்கு நிகர் அவரே. எந்நநேரத்திலும் உரிமையோடு தம்பி என்று அழைக்கும்பாங்கு. பத்திரிகையை மதிக்கும் நல்லபண்பு அவரிடமிருந்தது.

இக்கட்டான காலகட்டத்தில் அவரது உயிர்பிரிந்தகாரணத்தினால் அவரது பூதவுடல் முன்னே நின்று ஆழுதுபுலம்பி சேவைகளை நினைவுகூரமுடியாமல் போனது நாம் செய்த துரதிஸ்டமே.

ஆத்மா சாந்தியடைவதாக .
ஓம் சாந்தி சாந்தி சாந்தி ..

**விபுலமாமணி**
**வி.ரி.சகாதேவராஜா**



# His Excellency President‘s policies on Higher Education will be adopted

## New Vice Chancellor SEUSL Prof. Dr. Rameez Aboobacker





**Text & Pictures by:**
**A.B.Abdul Gafoor**
**Nintavur Correspondent**

I will adopt His Excellency President‘s policies on Higher Education for the regional and national development of the country said New Vice Chancellor SEUSL Prof. Dr. Rameez Aboobacker at his inaugural speech on the day the assumption of duties as the 5th Vice Chancellor of South Eastern University of Sri Lanka.

He made his address as follows, “all religious dignitaries, University Governing Council members, Deans of Faculties, Registrar, Librarian, Bursar, all Heads of Depts of study, all Professors, all academic staff members, all administrative head, academicSupportive staff members, all Nonacademic staff members and media personals, Good morning, As.kum, Ayobowan and Vanakkam.

First of all, I would like to thank Almighty God for giving me this opportunity to lead the University. Then, I would like to extend my gratitude to His Excellency the President for having reposed his faith in appointing me as the 5th VC of SEUSL. At this juncture, I remember the founder of this university, previous VCs and administrators of the university.

As you are all aware, this is the first time, a product of SEUSL assumes the position as VC in its history of over 25 years. Therefore, SEUSL is my Almameter and the development of the university in all forms is my heartbeat. I will hereby assure you that I will adopt His Excellency President‘s policies on Higher Education for the regional and national development of the country. In particular, based on His Excellency the President‘s policy, I will focus on to equip our graduates with knowledge and skills required by the employment market so that they will become the leaders of the future world.

Morever, there is an enormous responsibility upon shoulders to produce more technocrats from this university to meet the demands of the 21st Century and therefore, we need to ensure that our university students pursue new degrees and courses that will impart skills in demand in the 21st Century. In short, we need to establish new faculties, new degree programs and new courses that can ensure employment opportunity for our graduates in the world of works.

Furthermore, we also need to take measures to elevate the standard of



our university among world ranking universities. Most importantly, we have to transform this university as a leading center of excellence in Higher Education, Research and Innovation that will contribute to the regional and national development of the country. This University has to produce Youth who are patriotic within diverse culture and who can contribute to the nation building process.

For us to do all of these, I need the support and cooperation of all of yours in the future. I fervently hope that I will be able to garner the support of all stakeholders of this university to achieve this vision and mission. In this backdrop of this, I have recently visited Prof. MLA Cader, the founder VC of this university who is bedridden now and he advised me as follows:

I am glad that you have become as the VC from the university you have pursued your studies; you are an asset to this university; pls lift the standard of the university up; don‘t let it sink further“. These are reassuring words of wisdom flown out of the mouth of founder VC of SEUSL.

Under my administration as the VC , I assure you at this juncture that there will be zero tolerance for regionalism, partition, groupism, or any other ‘ism‘; there will be no room for unethical practices that may permeate in any forms in the institution. Furthermore, under my administration, all will be treated equally and our doors will always be open for suggestions and complaints for further improvement and development towards the right direction.

Most importantly, I firmly believe that everybody needs to do their duties perfectly; duty consciousness is the priority. As we all know, UGC circulars, Establishement Codes, government circulars are guardian and guidence of administration and therefore, we need to drive this University towards prosperity in light of all of this guidence.

Therefore, I seek all of ur support, regardless of your positions in the university, to help build our institution, transform this institution as hub of higher education and take the university to the next level. Last but not least, this is my university; this is your university; this is our university; this is the university that belongs to the community; this is a national state university and therefore we all have to work together to develop the university.

Finally, I would like to express my gratitude to the administrators of our university for organizing this event“ said Vice Chancellor.

# Mannar District Secretariat notifies state officials to ban pedestrians from entering the pond ahead of the festival



**(Vas Kunja)**

The Mannar District Secretariat has informed all the Heads of State in the Northern Province to inform the people in their areas that in the present situation many pilgrims from the outer districts have set out on foot for the festival due to the devotion of Mother Maruthamadu of the Diocese of Mannar and have sought to settle their debts on the festival day.

Mannar District Secretariat and the Department of Christian Affairs in collaboration with the Diocese of Mannar held a discussion on the Avani Peruvija of the Maruthamadu Festival which was held on Wednesday (11.08.2021) at Maduthiruda-thala under the chairmanship of the Government Agent of the Mannar District Mrs. A.Sranli Demel.

The discussion took place with the departmental officials including the Mannar Diocesan Bishop Rev. Emmanuel Penando Andakai.

In accordance with the decision taken at this meeting, it has been decided that the upcoming Madhu Annai festival to be held on Sunday 15.08.2021 will be held in accordance with the state health practices due to the current corona epidemic in the country.

Thus it is customary for many devotees from Mullaitivu and Jaffna to come as pilgrims from their respective areas every year in return for the gifts they have received from Madhu Anna and pay their dues on the festival day. The Mannar District Secretariat has informed all Government Agents in the Northern Province following the revelation that many people have been involved in such activities this year as well.

Due to the fear of corona which is currently the worst in the country, only the devotees mentioned on the Madhu festival are allowed inside the temple premises and those who come to the temple to go to the neighboring villages; It has been reported that outsiders for the ceremony will be barred following the determination that they will not be allowed to bathe or stay in the bathing pools in the area.

# Lands occupied by forces in Batticaloa District are to be handed over soon







A special discussion was held at the Batticaloa District Secretariat last Wednesday (11) regarding the resettlement of internally displaced persons and the return of state and private lands occupied by the police and the forces. The Batticaloa District Government Agent K. Karunakaran chaired this meeting in which the resettlement of internally displaced persons and the handing back of state and private lands occupied by the police and the forces were discussed in detail in order to ensure the normal life of the people.

In the discussion it was mentioned that some of the private lands, buildings, government lands, government buildings, temples, schools and Rural Development Society buildings have not yet been handed over to the owners yet.

The Divisional Secretaries have pointed out that the normal life of the people is still obstructed as forces are occupying private and state lands in Manmunai North, Manmunaipatru, Kaluwanchikudi, Vellaveli, Pattipalai, Koralaipatru central, Kiran and Vakarai Divisional Secretariat Divisions.

The security forces said that most of the land in occupation by them will be handed over to the due owners by the end of this year.

Brigade Commander of the 231st Regiment Dileep Bandara, Batticaloa District Superintendent of Police LR Kumarasiri, Additional Government Agent for the Land Division Mrs. Navaruparanjini Mukundan, Batticaloa District Director of the Land Reforms Commission Mr. V. Vimalraj, Director District Planning Sasikala Punniamurthy, officials of the triforces and the Divisional Secretaries were also present at the meeting following the health guidelines.

# Medical Equipment worth of 7m to Covid19 Treatment Centre in Ampara

**Text & Pictures by:**
**A.B.Abdul Gafoor**
**Nintavur Regional Correspondent**



Former State Minister of Health and Member of Parliament of Digamadulla District M.C. Faisal Caseem has handed over a worth of 7 million Medical equipment to the Covid19 Treatment Centre located at Nintavur in Ampara.

This special Unit was established to accommodate and treat the Covid19 positive patients of this region Due to the country faced inadequacy of Wards. Parliamentarian Faisal Caseem took tireless efforts and finally brought this to this region said Medical Superintendent of this Hospital Dr. Saheela Issadeen.

MP Faisal Caseem has made an urgent request to the Minister of Health to provide equipment for treatment in the region following the growth of infected people reported in the region during the last few weeks.

It is noteworthy that the first phase of medical equipment worth Rs. 30 lakhs has already been provided by the Member of Parliament for the opening of this treatment centre.

# Pilgrims marching towards Madu Church will not be allowed to enter

Large number of pilgrims from outer districts of Mannar have set out on foot for the festival of the Church of Madu to perform their vows as usual. Due to the present situation of COVID19 pandemic, they will not be able to do so as in the past. The Mannar District Secretariat has requested the other District Secretaries in the Northern Province to bring this to the notice of the pilgrims.

Mannar District Secretariat and the Department of Christian Affairs in collaboration with the Diocese of Mannar held a discussion on the August Festival of the Madu Church on Wednesday (11.08.2021) at the church premises under the chairmanship of the Government Agent of the Mannar District Mrs. A.Stanley De Mel. Bishop of Mannar Rt. Rev. Emmanuel Fernando and officials from the relevant departments participated in the meeting.

According to the decision taken at this meeting, the upcoming festival of the Madu Church which is to be held on Sunday 15.08.2021 will be celebrated strictly following the state health guidelines due to the current COVID 19 epidemic in the country.

It is customary for pilgrims from Mullaitivu and Jaffna areas to visit the church during the festival and submit offerings as thanksgiving for the gifts they have received from the Holy Mother. This year too it has been found that many are marching towards the church on foot for this holy event. Therefore the Mannar District Secretariat has informed all Government Agents in the Northern Province to inform the pilgrims that only a limited number of devotees will be permitted into the church premises.

They will not be allowed to go into the neighboring villages or to bathe in the usual bathing pools. Therefore outsiders entering the church is strictly prohibited this year.



# நாவலர் கலாசார மண்டபம் இந்துசமய,கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்குச் சொந்தமானது

## சமயத்தலைவர்களும் கல்விமான்களும் யாழ்.மாநகரசபையிடம் கூட்டாகக் கோரிக்கை

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நாவலர் கலாசார மண்டபம் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்குச் சொந்தமானது. அதனை அவர்களிடமே ஒப்படைத்துவிடுங்கள் என்று சமயத்தலைவர்களும் கல்விமான்களும் யாழ்.மாநகரசபையிடம் கூட்டாகக் கோரிக்கையினை முன்வைத்துள்ளனர். நல்லை ஆதீன முதல்வர், சர்வதேச இந்துமத பீடத்தின் செயலாளர், கலாநிதி ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன், யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், கலாநிதி ஆறு.திருமுருகன், ஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் சி.தனபாலா, ஆகியோர் இந்தக் கோரிக்கையினை முன்வைத்துள்ளனர்.



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அவரகள், இந்த மண்டபம் அமைக்கப்பட்டதன் நோக்கம் இன்றுவரை நிறைவேறவில்லை. இது நம்மவரே நாவலரின் ஆத்மாவை வேதனைப்படுத்தவைக்கும் விடயம். நாவலர் கலாசார மண்டபம் யாழ். மாநகர சபை நிர்வாகத்தாலிப்போது பராமரிக்கப்பட்டு வருகிறது. மண்டபத்திற்கு உரியவர்கள் அதனை ஒரு நல்ல நோக்கத்திற்காகவே மீண்டும் கோருகிறார்கள். உரியவர்களிடமே அதனைக் கொடுப்பது சாலச்சிறந்தது என்று குறிப்பிட்டுள்ளார். சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர், கலாநிதி ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா அவர்கள் இந்துக்கள் சார்பாக முன்வைத்த கோரிக்கையில், நாவலர் பிறந்த மண்ணில் நாவலருக்குரிய பணிகளை அவருடைய நினைவு மண்டபத்திலே முன்னெடுப்பதற்கு நம்மவரே தடையாகவிருப்பதென்பது, நம்மவரே என்னைக் கண்ணீர் சிந்தவைத்தனர் என்று நாவலரே தன் வாயாற்சொல்லி வேதனைப்பட்டதை நினைவுகூர்வதாய் உள்ளது. உரிய முறையில் அவர் பணிகளை முன்னெடுக்க மண்டபத்தைத் திணைக்களத்திடம் வழங்குங்கள் என்று கேட்டுக்கொண்டார்.



யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள், நாவலரின் எண்ணங்கள் நம்மவர் ஒற்றுமையில் நிலைக்கவேண்டும் என்றார். எங்களுடைய சமூகம் மீண்டெள நாவலரைப் பற்றுக்கோடாய்க் கொள்ளவேண்டும். உணர்ச்சியோடு பலரும் பேசலாம். அவை செவிக்கு இன்பமூட்டுவதாகவும் அமையலாம். தமிழ் வாழவேண்டும் என்று விரும்பினால், தமிழர்கள் இங்கே வாழவேண்டும். அதுபோல நாவலருடைய எண்ணங்கள் ஈடேறவேண்டும் என்றால் அவருடைய சேவைகளுக்குச் செயலூக்கந்தரவேண்டும். நம்மவரே அதற்குத் தடையாக இருப்பது நன்றன்று. நாவலர் வழிகாட்டிய பணியைத் தீவிரப்படுத்த இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்



முனைப்புக்காட்டுகிறது. அவர்களின் செயலூக்கத்திற்கு உந்துசக்தியாக இருங்கள். திணைக்களத்திடம் உரியமுறையிற் கலாசார மண்டபத்தை ஒப்படைத்து நீங்களும் ஒரு பங்காளியாயிருந்து செயற்படுங்கள். நாவலரின் எண்ணங்களுக்கு நாம் ஒன்றுசேர்ந்து வழிசமைப்போம் என்று தனது கோரிக்கையிற் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள், அற்ப சலுகைகளுக்கு விலைபோகாத செந்நெறியாளன் ஈழத்திற் தோன்றிய முதல் இயக்கவாதி ஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானது சேவை என்றும்



நினைவு கூறப்படவேண்டுமென்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்ட மண்டபம், இன்றுவரை நின்றுபோன கதையாகவே உள்ளது. வரலாறு ஆரம்பித்த காலம் முதல் நம் இனமே எமது முன்னேற்றத்திற்கான தடைக்கல் என்பதில் மட்டும் இன்றுவரை ஒற்றுமை நிலவுகிறது. நிபந்தனைகளோடு வழங்கப்பட்ட நாவலர் கலாசார மண்டபத்தை மீளவும் அதற்குரிய அரசநிர்வாகம் நியாயபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்கப் பல தடவைகள் கோரியிருந்தது. இதனால் எந்தப் பலனும் இல்லை. வழங்குவதற்கு எது தடை என்பது புரியவில்லை என்று தனது ஆதங்கத்தினைத் தெரிவித்தார்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் இந்துமாமன்றத்தின் சார்பில், நாவலரின் புனிதமான நினைவு மண்டபம் ஆன்மிகச் சூழலில் நல்லமுறையில் இதுவரை பேணப்படவில்லை. நாவலரின் மண்டபத்தில் அவரது ஒரு புகைப்படங்கூட இல்லை. நாவலரின் மண்டபம் என்ன நோக்கத்திற்கு உருவாக்கப்பட்டதோ அவையெதுவும் நிகழ்ந்தேறவில்லை. தொல்லியல் அரும்பொருட் காட்சியகத்திற்கு வரும் சுற்றுலாப்பிரயாணிகள் இங்கு வைத்து அசைவ உணவுகள் உட்கொள்ளுவது அடிக்கடி நிகழும் விடயம். இந்த அவலங்கள் தொடராது மண்டபத்தைத் திணைக்களத்திடம் ஒப்படையுங்கள் என்று தெரிவித்தார்.



ஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் திரு சின்னத்துரை தனபாலா அவர்கள், கிழக்கிலங்கையில் இன்று புனிதமாகப் போற்றப்படும் விபுலானந்தர் நினைவிடம் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின், பெருஞ்செலவிலான புனரமைப்பில், ஆன்மிகச்செழுமையோடும் வரலாற்றுப்பெருமையோடும் நிமிர்ந்து நிற்கிறது. திணைக்களத்திற்கு



உரிமமில்லாத இந்த வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த இடம் எந்தவொரு எதிர்பார்ப்புமின்றி அந்தத் திணைக்களத்தாற் புனரமைக்கப்பட்டமைக்கு எமக்கு வழிகாட்டிய ஆன்மிகவாதிகளின் நினைவிடங்கள் என்றும் பூஜிக்கப்படவேண்டியவையே என்பதுமட்டுந்தான் காரணம். அவர்களின் உயர்ந்தவெண்ணம் இன்று நம்மனைவருக்கும் பெருமை சேர்த்திருக்கிறது.ஆனால் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்குச் சொந்தமான நாவலர் கலாசார மண்டபம் வெறும் பெயரோடு மட்டும் கட்டடமாக நிற்கிறது. இதற்கான தடைக்கல் யார்? இது வரலாற்றுத் தவறு என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். தயவுசெய்து மண்டபத்தைத் திணைக்களத்திடம் ஒப்படைத்துவிடுங்கள் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.




# இன்று சித்தானைக்குட்டி சுவாமிகளினது 70 வது குருபூஜை!

சித்தருள் சித்தர் சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 70ஆவது குருபூஜை இன்று (14) சனிக்கிழமை 14ஆம் திகதியாகும்.

சித்தானைக்குட்டி அவர்கள் இந்தியாவின் இராமநாதபுரத்தின் சிற்றரசரின் மகனாக அவதரித்தார். இவரது இளமைப் பெயர் 'கோவிந்தசாமி' ஆகும். இவ்ராச்சியத்தில் ஏற்பட்ட பயங்கரத் தொற்று நோயினால் தனியாகவும் குடும்பத்துடனும் பலர் மாண்டனர்.

இக்கால கட்டத்தில் இரு மகான்கள் நோயினை தாமே ஏற்று பணியாற்றலாயினர். இப்புதுமையினை அறிந்த சிற்றரசன் மகான்களை அழைத்து உபசாரம் செய்ய எண்ணம் கொண்டு தனது மகனிடம் மகான்களை அழைத்து வருமாறு பணித்தான்.

தந்தையின் பணிப்பினை ஏற்று உடன் புறப்பட்ட கோவிந்தசாமி இல்லமெல்லாம் தேடி அலைந்து ஓர் குடிசையில் கண்டு இருவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி நின்றார்.

மகான்கள் கோவிந்தசாமியை கட்டியணைத்து ஆசி வழங்கினர். உள்ளம் துறவறத்தினை நாடியதால் மகான்களுடன் இணைந்து நோயுற்ற மக்களுக்கு பணியாற்றலானார். பூர்வீகத்தொடர்பு ஈழம் நோக்கி ஈர்ந்திழுக்க தூத்துக்குடி சென்று கப்பலில் வருவதற்கான சீட்டினைப் பெறுவதற்கு அன்பர் ஒருவரை அனுப்பி வைத்தனர். இருவருக்கு மட்டுமே பிரயாணச் சீட்டு கிடைத்ததினால் கோவிந்தசாமியை அக்கரையில் விட்டுவிட்டு இரு மகான்களும் கப்பல் ஏறி கொழும்பு துறைமுகத்தை சென்றடைந்த போது கூடிநின்ற மக்கள் கூட்டத்தினுள் கோவிந்தசாமி நிற்பதை கண்ணுற்று தங்கள் சீடனிடம் பொதிந்திருந்த பக்குவ நிலையினை முன்னரே உணர்ந்திருந்ததினால் ஆச்சரியத்தினை காட்டிக் கொள்ளவில்லை. இச்செய்கை மூலம் சித்தராக பரிணமித்தார்கள்.

1920இன் முற்பகுதியிலிருந்து ஈழத்தின் மூலை முடுக்கெல்லாம் நடமாடித்திருந்து பித்தனாகவும் பேயனாகவும் கேலி பண்ணுவதற்குரியவராகவும் தன்னை வெளிக்காட்டி உள்ளன்புடன் தன்னை நாடிவரும் அன்பர்களின் மனோநிலைக் கேற்ப அருளுரைகள்இ அற்புதங்கள் மூலம் மக்களை வழி நடத்தியவர் ஜீவ சித்தர் சித்தானைக்குட்டி சுவாமிகள் ஆகும்.



சுவாமிகள் காரைதீவில் தனக்கென ஆச்சிரமம் அமைத்து தங்கியிருந்தார்கள். நடையாகவும் மாட்டு வண்டிகளிலும் சுவாமிகளை தரிசிப்பதற்கு வருபவர்கள் 'காவு'களில் உணவுப் பொருட்களையும் பிரியமான பண்டங்களையும் காணிக்கையாக வழங்குவார்கள். அவை அனைத்தும் தன்னை நாடிவரும் அடியார்க்க்;கு பகிர்ந்தளிப்பார்கள்.

சுவாமி அவர்கள் ஆடாதசித்தே இல்லை என்கின்ற அளவிற்கு பல இடங்களில் தனது சித்து விளையாட்டை ஆடியிருக்கின்றார்கள். அவற்றுள் சில 'கதிர்காமத்தில் முருகப்பெருமானல் அமிர்தத் துளி கிடைக்கப் பெற்றமை சாண்டோ சங்கரதாஸை இரும்பரசனாக புகழ் பூக்கச்செய்தமைஇ கடலின் மேலால் நடந்த அதிசயம், கல்முனை சந்தியிலிருந்து கதிர்காமத்தில் தீப்பிடித்த திரைச்சீலையை அணைத்த பெருந்தகை ,கதிர்காமத் திருவிழாக் காட்சியை தனது உள்ளங்கையில் காண்பித்த மகான்,

நஞ்சு ஊட்டப்பட்டும் தீயிட்டு எரித்த போதும் மீண்டும் எழுந்து நின்று சித்தாடிய சித்தர் அவர்கள் '1951ஆம் ஆண்டு ஆடித்திங்கள் சுவாதி நட்சத்திர தினத்தன்று சமாதி நிலையை எய்தினார்கள்'.

இச்செய்தியினை கேள்வியுற்ற பக்த அடியார்கள் நாலா திசைகளிலிருந்தும் காரைதீவு ஆச்சிரமத்தில் ஒன்று கூடினர். 'சித்தர் சேவா சங்கம்' அமைக்கப்பட்டு சமாதி வைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது.

தான் சமாதியான பின் 'தனது அடிவயிற்றிலிருந்து இரத்தம் பெருகு' மென்றும் அதன் பின்னரே சமாதி வைக்க வேண்டும் என்று ஏற்கனவே சுவாமி அவர்கள் கூறியிருந்தார்கள். சுவாமி அவர்கள் கூறியிருந்ததிற்கமைய மூன்றாம் நாள் அடி வயிற்றிலிருந்து இரத்தம் பெருகியது. ஒரு யார் கன பரிமாணத்தில் குழியமைத்து நான்காம் நாள் பக்தர்களின் ஆராதனையுடன் சுவாமி அவர்கள் 'சமாதி' வைக்கப்பட்டார். மட்டுமாநகரின் கண்ணாய் மிளிர்கின்ற காரேறு மூதூர் எனும் காரைதீவு 03ஆம் குறிச்சியில் சித்தானைக்குட்டி புரத்தில் ஜீவசமாதி வைக்கப்பட்டது.

பொது மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிருவாக சபையினரால் சமாதி ஆலயம் வழிநடத்தப்பட்டு வருகின்றது. இச்சபை வருடாவருடம் மீளமைக்கப்படுவது வழமையாகும். 1985 ,198% ,1990 காலப்பகுதியில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக இவ்வாலயம் சேதமாக்கப்பட்டது.

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தால் அன்னதானமடம் காளியம்மன் முருகன் பிள்ளையார் ஆலயங்கள் உட்பட சுற்றுமதில் அசைவுள்ள அனைத்து உடமைகளும் முற்றாக அழிக்கப்பட்டது. தற்பொழுது இவ்வாலயம் பொதுமக்களின் பங்களிப்புடனும் இந்து கலாசார அமைச்சின் உதவியுடனும் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

ஜீவ சித்தர் சித்தானைக்குட்டி சுவாமி அவர்களின் குரு பூசையும் அன்னதானமும் வருடந்தோரும் தமிழுக்கு ஆடித்திங்கள் சுவாதி நட்சத்தர தினத்தன்று பயபக்தியுடன் குருவருளால் சிறப்பாக நடைபெறுகின்றது.

உள்ளூர் வெளியூர் அன்பர்கள் இத்தினத்தில் நிறைந்து காணப்படுவர். இவ்வாலயத்தில் அறநெறி வகுப்பு வெள்ளிகிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனை,விசேட தினங்களில் பூசைகளும் நடைபெற்று வருகின்றது.

சுவாமிகள் சமாதி அடைவதற்கு முன்னர் ஆடிய சித்துக்கள் போல் சமாதிநிலை அடைந்த பின்னரும் இவ்விடத்தில் சித்துக்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றது.

**'மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது'**

**வி.ரி.சகாதேவராஜா**





# திருக்கோவில் பிரதேசம் கஞ்சிகுடிச்சாற்றில் இடம்பெறும் மண் அகழ்வினால் பாதிப்பு

## விவசாயிகள் குடியிருப்பாளர்கள் விசனம்

(திருக்கோவில் நிருபர்-
எஸ்.கார்த்திகேசு)

திருக்கோவில் பிரதேசம் கஞ்சிகுடிச்சாற்றில் இடம்பெறும் மண் அகழ்வினால் பாதிப்பு விவசாயிகள் குடியிருப்பாளர்கள் விசனம்.

அம்பாரை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு காட்டுப் பிரதேசத்தில் தற்போது இடம்பெற்று வரும் பாரியளவிலான ஆற்றுமண் அகழ்வினால் விவசாயப் பாதைகள் மற்றும் குடியிருப்பாளர்கள் பாதசாரிகள் பாதிக்கப்பட்டு வருவதாக பொது அமைப்புக்கள் விசனம் தெரிவித்து வருகின்றன.

இவ் விடயம் தொடர்பாக ஆராயும் கலந்தரையாடல் கூட்டம் ஒன்று திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனின் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இன்று இடம்பெற்று இருந்தன.

இதன்போது விவசாய அமைப்புக்கள் கிராம அபிவிருத்திச் சங்க நிருவாகிகள் மீனவர் சங்க அமைப்புக்கள் மற்றும் பிரதேச இளைஞர்கள் ஆகியோருக்கும் அரச துறைசார் அதிகாரிகள் ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல் இடம்பெற்று இருந்தன.













திருக்கோவில் கஞ்சிகுடிச்சாறு காட்டுப் பிரதேசத்தில் இருந்து சுமார் 4 கி.மிற்றர் தூரத்திற்கு ஆற்று மணல் அகழ்வுக்காக உதிதேசிக்கப்பட்டு மூன்று நிறுவனங்களுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டு மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் இங்கு இடம்பெறும் பாரிய மணல் அகழ்வின் ஊடாக திருக்கோவில் பிரதேச மக்களின் வளம் அழிந்து போவதுடன் பிரதேச மக்கள் தமக்கான மணலை அதிக விலை கொடுத்தே பெற்று வருகின்றனர்.

இதேவேளை விவசாய பாதைகள் சேதமடைவதோடு கனரக வாகனங்கள் அதிக வேகத்துடன் ஒன்றின் பின் ஒன்றாக செல்லும் போது விபத்துக்கள் ஏற்பட சந்தர்ப்பங்கள் காணப்படுவதோடு புழுதி காரணமாக இங்கு வாழும் மக்களுக்கு சுவாச நோய்களுகளும் ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படுவதாக மேற்படி அமைப்புக்களால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு இருந்தன.

இந்நிலையில் இவ் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை கண்ட பின்னர் மண் அகழ்வுக்கான வேலைகளை முன்னெடுக்குமாறு திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனிடம் பொது அமைப்பின் பிரதிநிதிகள் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு இருந்தன.

இவ் கூட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரதேச செயலக அதிகாரிகள் திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் தம்பிலுவில் நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்கள் தம்பிலுவில் கமநல சேவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வன பரிபாலன திணைக்கள உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்ததுடன் மேற்குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளில் ஒருசிலவற்றுக்கு தீர்வுகளும் எட்டப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.







# வீதிகளில் கோட்டப்படும் முகக்கசவங்கள்

## பாதிப்படையும் மக்கள்

நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்படும் வீதம் மற்றும் மரணங்கள் வீதம் அதிகரித்து காணப்படும் நிலையில் அரசாங்கம் நாட்டு மக்களை காப்பாற்ற பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

கொரோனா தொற்று பரவுவதை தடுக்க பொதுமக்கள் அனைவரும் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். பொது இடங்களில் சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும் என அரசாங்கம் பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றது.

நீங்கள் வீட்டை விட்டு வெளியேறும் போது கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். இதில் உட்புற மற்றும் வெளிப்புற இடங்கள் இரண்டுமே அடங்கும். இது கொவிட்-19 நோய் பரவும் அபாயத்தைக் குறைக்கிறது என தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் நாட்டில் கொரோனா பரவலை கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டாலும் நாட்டிலுள்ள ஒரு சில பொது மக்கள் அதற்கு எதிர்மாறாக நடந்து கொள்ளும் விதம் அதிகரித்துக் காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி பிரதேச செயலகம் மற்றும் வாகரை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியோரங்களில் மக்கள் பயன்படுத்திய கழிவுகளை கொட்டப்பட்டு காணப்படுகின்றது. இதனால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்பட்டுக் காணப்படுகின்றது.

வீதியோரங்களில் சுகாதார துறையினரின் கொரோனா வைரஸ் பாதுகாப்பு ஆடைகள், முகக்கவசங்கள், மலசலகூட கழிவு பொருட்கள், மது போத்தல்கள், வீட்டுக் கழிவுகள் என்பன வீதிகளில் முறையற்ற விதத்தில் வீசப்பட்டு காணப்படுகின்றது.



இதனால் மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியைப் பயன்படுத்துவோர் நாளாந்தம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்துடன் குறித்த பகுதியில் கூடுதலான கால்நடைகள், யானைகள் என்பன உணவு தேடி குறித்த வீதிகளில் செல்வது வழமை, இவ்வாறு கொட்டப்பட்டு காணப்படும் கொரோனா பாதுகாப்பு கழிவுப் பொருட்கள் மற்றும் வீட்டுக் கழிவுப் பொருட்கள் என்பவற்றின் மூலம் உணவு தேடி செல்லும் நிலையில் அதனுள் காணப்படும் கிருமித் தொற்றுக்கள் கால்நடைகளைகள் மற்றும் யானைகளை பாதித்து விடக்கூடிய நிலைமை அதிகம் காணப்படுகின்றது.

குறித்த கிருமித் தொற்றின் மூலம் கால்நடைகளுக்கு தொற்று ஏற்படும் பட்சத்தில் அதன் மூலம் கிடைக்கும் பால்களை அருந்தும் மக்களுக்கு பல்வேறு நோய்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றது. இந்த விடயத்தில் பொதுமக்களின் கரிசனை குறைவாகவே காணப்படுகின்றது.

அத்தோடு குறித்த பகுதிகளை அண்டிய உள்ளேயுள்ள இடங்களில் பிரதேச சபைகளின் கழிவுகள் கொட்டப்படுகின்றது. அதனை உண்பதற்கு வரும் யானைகள் வீதியை கடக்க முற்படும் வேளையும் வீதியிலுள்ள மக்களால் கொட்டப்படும் கழிவுகளை உண்ணும் நிலைமை உருவாகின்றது.

குறிப்பாக மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியினால் பயணிக்கும் பெரும்பாலானோர் வாகனத்தில் செல்லும் போது கழிவுகள் மற்றும் முகக்கவசங்களை வீசி விட்டு செல்கின்றனர். இதனால் குறித்த பகுதியில் காற்று வீசும் நிலையில் இதனை அண்டிய பகுதியில் வாழும் மக்கள் குடியிருப்புக்கு செல்கின்றது. அத்தோடு வீதியால் பயணிப்பவர்களின் உடல்களில் முகக்கவசங்கள் படுவதால் மக்கள் அச்சத்துடன் பயணிக்கின்றனர்.

குறித்த பகுதிகளில் முகக் கவசங்களை வீசிச் சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் சென்றுள்ளதால் மக்கள் பல்வேறு விமர்சனங்களை தெரிவிக்கின்றனர். எனவே ஓட்டமாவடி பிரதேச செயலாளர், வாகரை பிரதேச செயலாளர், ஓட்டமாவடி பிரதேசசபை இதில் கூடிய கவனம் செலுத்தி கொரோனா ஆடைகளையும், முகக்கவசங்களையும் அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வதுடன், இனிமேலும் இவ்வாறான சம்பவம் இடம்பெறாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.



ந.குகதர்சன்









# நுவரெலியாவில் 188 கொரோனா மரணங்கள்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா மாவட்டத்தில் இதுவரையில் 9342 பேர் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். 188 பேர் உயிரிழந்துள்ளனர். 24 மணி நேரத்தில் 91 பேர் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். நுவரெலியா மாவட்டத்தின் கொரோனா தொற்று தொடர்பாக 12.8.2021 மாலை வெளியான அறிக்கையின்படி 9342 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது.

இவர்களில் 188 பேர் மரணமடைந்துள்ளனர். 5490 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த 12.8.2021 வரையான 24 மணித்தியாலயத்தில் 91 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளதாகவும் 45 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

அம்பகமுவ பகுதியில் 2076 குடும்பங்களும் கொத்மலை பகுதியில் 1242 குடும்பங்களும் ஹங்குரன்கெத்த பகுதியில் 244 குடும்பங்களும் வலப்பனை பகுதியில் 1117 குடும்பங்களும் நுவரெலியாவில் 811 குடும்பங்களுமாக மொத்தமாக 5490 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கொரேனா தொற்று உறுதியானவர்களில் அதிகமானவர்கள் அம்பகமுவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் அம்பகமுவ பகுதியில் 1744 பேரும் பொகவந்தலாவ பகுதியில் 1072 பேரும் ஹங்குரன்கெத்த பகுதியில் 443 பேரும் கொட்டகலை பகுதியில் 667 பேரும் கொத்மலையில் 726 பேரும் லிந்துலையில் 762 பேரும் மஸ்கெலியா 648 பேரும் மதுரட்ட பகுதியில் 178 பேரும் நுவரெலியா மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்களில் 540 பேரும் புதிய திஸ்பனை பகுதியில் 819 பேரும் நுவரெலியாவில் %66 பேரும் இராகலையில் 592 பேரும் வலப்பனை பகுதியில் 385 பேருமாக மொத்தமாக 9342 பேர் பி.சி.ஆர் பரிசோதனையின் மூலமாக தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். தொற்றாளர்கள் அதிகம் இனம் காணப்பட்ட பிரதேசமாக அம்பகமுவ பிரதேசம் காணப்படுகின்றது. இங்கு 1%44 பேர் இனம் காணப்பட்டுள்ளதுடன். இதுவரையில் நுவரெலியா மாவட்டத்தில் 188 பேர் உயிரிழந்துள்ளதுடன். அதில் அதிகமானவர்கள் நுவரெலியா பகுதியிலேயே உயிரிழந்துள்ளனர். 80 பேர் உயிரிழந்துள்ளனர். இது தவிர அம்பகமுவ பகுதியில் 56 பேரும் வலப்பனை பகுதியில் 26 பேரும் கொத்மலையில் 22 பேரும் ஹங்குரன்கெத்த பகுதியில் 4 பேருமாக 188 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த 24 மணித்தியாலத்தில் அதாவது இந்த அறிக்கை வெளியான (12.08.2021) அன்று மாலை 4 மணி வரை நுவரெலியா மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியிலேயே அதிகமான தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். 22 பேர் இனம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உதவி கல்விப்பணிப்பாளருக்கு தேசபந்து விருது

(தலவாக்கலை பி.கேதீஸ்)



நுவரெலியா கல்வி வலயத்தின் ஆரம்பக்கல்விக்குப் பொறுப்பான உதவி கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வரஜா இலங்கை நாட்டின் மூன்றாவது அதிவுயர் கௌரவ விருதான தேசபந்து விருதினைப் அண்மையில் பெற்றுக்கொண்டார்.

இவர் 2004 ம் ஆண்டில் சிறந்த அதிபர்களுக்கான வித்யா கீர்த்தி ஸ்ரீ விருதினை பெற்றுக்கொண்டமையும் இவர் ஒரு அகில இலங்கை சமாதான நீதவான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா கல்வி வலய அதிகாரிகள் பற்றாக்குறையை நிவர்த்திக்க இம்ரான் எம்.பி கோரிக்கை

(சில்மியா யூசுப்)



திருகோணமலை மாவட்ட கிண்ணியா கல்வி வலயத்தில் நிலவும் இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர் பற்றாக்குறை காணப்படுவதனால் இதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரை நேரில் சந்தித்து கோரிக்கையை விடுத்துள்ளார்.

அதன்படி கல்வி அமைச்சு செயலாளர் எம்.சீ.எல். பெர்னாண்டோவுக்கு அவர் கையளித்துள்ள கோரிக்கைக் கடித்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

கிண்ணியா கல்வி வலயத்தில் கடமை புரிந்த கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் இருவர் பதில் உத்தியோகத்தர் இன்றி சமீப காலங்களில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதனால் இங்கு நிர்வாக நடைமுறைகள மேற்கொள்வதில் சிரமங்கள் இருப்பதாக ஐக்கிய கல்வி ஊழியர் சங்கம் எனது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளது.

66 பாடசாலைகளையும், சுமார் 1300 ஆசிரியர்களையும் கொண்ட இவ்வலயத்தில் தற்போது வலயக் கல்விப் பணிப்பாளர் உட்பட 3 கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் மட்டுமே கடமை புரிகின்றனர். 10 க்கு மேற்பட்ட கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் வெற்றிடம் இங்கு உள்ளதாக அறிய முடிகின்றது.

இந்நிலையில் கல்வி நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்கள் இங்கு எதிர்நோக்கப்பட்டு வருகின்றன. எனவே, இதனைக் கவனத்தில் கொண்டு இங்கு நிலவும் கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் வெற்றிடங்களை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் பற்றாக்குறை பெருமளவு நிலவுவதாகவும், எனினும் முடியுமானவரை இவ்விடயத்தைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் இதன் போது செயலாளர் தெரிவித்தார்.

# மீன்பிடித்துறை இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர மட்டக்களப்புக்கு விஜயம்

## பல்வேறு மீன்பிடித்துறை தொடர்பில் ஆய்வு



மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களின் அழைப்பினை ஏற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்திருந்த மீன்பிடித்துறை இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர அவர்களுடன் இணைந்து மாவட்டத்திலுள்ள நீரியல்சார் வளங்களை பயன்படுத்தி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை முன்னெடுத்தல், புதிய துறைமுகங்கள் மற்றும் இறங்குதுறைகள் போன்றவற்றினை அமைத்தல் இதன் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தின் பொருளாதார நிலைமையையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்துதல் என்பன தொடர்பாக மாவட்டத்தின் பல பகுதிகளாகிய வாகரை, பனிச்சங்கேணி, கொக்கட்டிச்சோலை, கிரான்குளம் உள்ளிட்ட இடங்களுக்கான களவிஜயங்களை வியாழக்கிழமை (12) மேற்கொண்டிருந்து பார்வையிட்டடிருந்தனர்.

இதன்போது ஒவ்வொரு பிரதேசங்களிலும் காணப்படும் நீர் வளங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் அவற்றை பயன்படுத்தி எவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் பொருளாதாரத்தில் மேம்பட்ட சமூகமாக மாற்றுவது என்பது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

கடந்த காலமாக முதலைக்குடா மற்றும் மகிழடித்தீவு ஆகிய பகுதிகளில் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் தலைமையின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் சுமார் 380 ஏக்கர் நிலப்பரப்பினை கொண்ட இறால் வளர்ப்பு திட்டத்தினை விரைவு படுத்துவது தொடர்பாகவும், மாவட்டத்தில் இயற்கையாக அமையப்பெற்ற சில பகுதிகளாகிய கோட்டைக்கல்லாறு, களுவன்கேணி, வாழைச்சேனை போன்ற பகுதிகளில் புதிய துறைமுகங்கள் மற்றும் இறங்கு துறைகள் அமைத்தல் தொடர்பாகவும், மாவட்ட மீனவர்களுக்கு மீன்பிடி தொடர்பான நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் உபகரணங்களை அறிமுகம் செய்தல் தொடர்பாகவும், கடல் சார் உற்பத்தி தொடர்பான தொழிற்சாலைகளை நிறுவுதல் போன்றவை தொடர்பான பல வேலைத்திட்டங்கள் சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களால் இதன்போது இராஜாங்க அமைச்சரிடம் முன்மொழியப்பட்டன.

இவ்விஜத்தின் போது இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் மற்றும் பல துறைசார் அதிகாரிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் ஆவணி மாதம் மாத்திரம் 215 கொவிட் தொற்றாளர்கள் இனம் காணல்

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் எடுக்கப்பட்ட பிசீஆர் பரிசோதனையில் வியாழக் கிழமை அதாவது 12.08.2021 அன்று கிடைக்கப்பெற்ற முடிவில் 14 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாகவும் இந்த மாதம் (08) மட்டும் 215 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது கொரோனா தொடர்பாக அவர் தெரிவிக்கையில் வியாழக்கிழமை கிடைக்கப்பெற்ற கொரோனா தொற்றாளர்களில் மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்களில் 12 நபர்களும், பேசாலையில் 02 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இற்றைவரைக்கும் மன்னார் மாவட்டத்தில் 1256 கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

இவ் நடப்பு ஆண்டில் (2021) 1239 தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் (08) மட்டும் 215 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடம் (2021) சமூகத்தில் எடுக்கப்பட்ட பிசீஆர் பரிசோதனையில் 923 நபர்களும், மன்னார் பொது வைத்தியசாலையில் 316 பேரும் கொரோனா தொற்றாளர்களாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் (08) 13%5 பிசீஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மன்னார் மாவட்டத்தில் இதுவரை மொத்தமாக 2%211 பிசீஆர் பரிசோதனைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தற்பொழுது 242 பிசீஆர் பரிசோதனைகளுக்கான முடிவுகள் வரவேண்டி இருப்பதாகவும் தெரிவித்துள்ள நிலையில்இதுவரைக்கும் மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களாக இறந்தவர்களின் தொகை 10 ஆக இரப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மிக குறைந்த ஆயர்கள் அருட்பணியாளர்களுடன் மருதமடு பெருவிழா திருப்பலி

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறைமாவட்டத்தில் ஆவணி மாதம் 15 ந் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற இருக்கும் மருதமடு அன்னையின் பெருவிழாவானது சிலாபம் மறைமாவட்ட ஆயர் மேதகு வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகையின் தலைமையில் இவ் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவிழாத் திருப்பலியானது அன்று காலை 6.15 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் ஆண்டகை மற்றும் அருட்பணியாளர்கள் இணைந்து இவ் விழா கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுப்பர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா காரணமாக இவ் விழாவில் ஏனைய மறைமாவட்டங்களின் ஆயர்கள் மற்றும் அருட்பணியாளர்களின் வருகைகளும் பெரும்பாலும் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




# 390 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஏழு கிராம சேவகர் பிரிவுகளில் 117 குடும்பங்களைச் சேர்ந்த 390 பேர் நேற்று (12.8.2021) பெய்த கடும் மழை காரணமாக இடம்பெயர்ந்துள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய உதவி அத்தியட்சகர் ரஞ்ஜித் அழககோன் தெரிவித்தார்.

கிராம சேவகர் பிரிவுகளின் படி விதுலிபுர தெற்கில் 22 குடும்பங்களைச் சேர்ந்த 50 பேரும், செல்லிட்டிகமவில் 04 குடும்பங்களைச் சேர்ந்த 17 பேரும், அம்பகமுவ கிழக்கில் 30 குடும்பங்களைச் சேர்ந்த 132 பேரும், வட்டவளையில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேரும், ரொசெல்லவில் 9 குடும்பங்களைச்
சேர்ந்த 45 பேரும், மில்ஹாமுல்ல பகுதியில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேரும், அம்பகமுவ தெற்கில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 45 பேரும், கினிகத்தேனவில் 05 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேரும் இடம்பெயர்ந்துள்ளனர். இதில் 2 வீடுகள் முற்றாகவும் 7 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மஜ்மா நகர், சூடுபத்தினசேனையில் 1,500 க்கும் அதிகமான ஜனாஷாக்கள் நல்லடக்கம்

(எம்.ஐ.லெப்பைத்தம்பி)




நாடளாவிய ரீதியில் கொரோனாவினால் மரணிக்கின்ற ஜனாஷாக்கள் இன்று வரை கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மஜ்மா நகர், சூடுபத்தினசேனையில் நல்லடக்கம் செய்யப்பட்டு வருகின்றது.

அரசினால் கொரோனா ஜனாஷாக்களை அடக்க அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து சுமார் 1,500 க்கும் அதிகமான ஜனாஷாக்கள் நாடளாவிய ரீதியிலிருந்து கொண்டு வரப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை பிரதேச சபை, பிரதேச செயலகம் மற்றும் சமய, சமூக நிறுவனங்கள் மிகவும் அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருகின்றமை சகலரும் அறிந்த விடயம்.

கொரோனா ஜனாஷாக்களை அடக்கம் செய்ய காணி வழங்கியதிலிருந்து இன்று வரை இப்பிரதேச மக்களும் அரச, அரச சார்பற்ற மற்றும் சமூக,சமய நிறுவனங்கள் வழங்கிய வரும் ஒத்துழைப்பு, அர்ப்பணிப்பு குறைத்து மதிப்பிட முடியாதவை.

நல்லடக்கம் தொடங்கி ஜனாஷாக்களுடன் வருபவர்களுக்கான உறவினர்களுக்கான தங்குமிடம் மற்றும் ஏனைய உதவிகளை சிறப்பாக வழங்கி வருகின்றமை குறிப்பிட்டாக வேண்டியதே.

இவ்வாறான சூழலில் கொரோனாவின் வீரியம் அதிகரித்து முதலிரு அலைகளையும் கடந்து மூன்றாவது அலை ஆரம்பித்து டெல்டா தொற்று மரணங்களும் எண்ணிக்கையும் அதிகரித்தே வருகின்றது.

நாளொன்றில் மரண எண்ணிக்கை நூற்றைத் தாண்டியுள்ள நிலையில், அவற்றை உரிய முறைப்படி அடக்கம் செய்ய இட நெருக்கடி நிலையினை தற்போது அடக்கம் செய்யப்பட்டு வரும் சூடுபத்தினசேனை பிரதேசம் எதிர்நோக்கியுள்ளதை சகல மட்டத்தினரும் சுட்டிக்காட்டி மாற்றுக்காணியொன்றினை அடையாளங்காண வேண்டிய வலுவான கோரிக்கையினை முன்வைத்து வருகின்றனர்.

அதே நேரம், பொறுப்பு வாய்ந்த பிரதேச சபையின் அதிகாரத்தரப்பினர் வெறும் ஊடக அறிக்கைகளுடன் தமது முன்னெடுப்புக்களை மட்டுப்படுத்திக் கொண்டதுடன், உரிய தரப்பினரின் கவனத்துக்கு உத்தியோகபூர்வமாக கொண்டு செல்லாமையும் இன்றைய இக்கட்டான நிலைக்கு காரணம் எனலாம்.

அவ்வாறு கொண்டு செல்லப்பட்டிருக்கப்பட்டிருக்குமானால் மாற்றுக்காணிக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

குறித்த காணி நீண்டகாலத் தேவையின் அடிப்படையில் இப்பிரதேச மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு சாதாரண மரணங்கள் சம்பவிக்கின்ற போது, அவைகளை அடக்கம் செய்ய முழுப்பிரதேசத்துக்குமான பொது மையவாடிக்காணி என்ற அடிப்படையில் முறையான அனுமதி பெறப்பட்டதாகும்.

அதன் பின்னர் ஏற்பட்ட கொரோனா சூழ்நிலையில் கொரோனா ஜனாஷாக்களை அடக்கம் செய்ய தற்காலிகத் தீர்வுக்காக மனமுவந்து அளிக்கப்பட்டது.

இருப்பினும், இப்பிரதேசம் பாரிய காணிப்பிரச்சினையக் கொண்ட பிரதேசம் என்பதாலும் இப்பிரதேசத்துக்கான காணி வளங்கள் அபகரிக்கப்பட்டு துண்டாடப்பட்டுள்ளதுடன், தொடர்ந்து அபகரிப்புக்கள் இடம்பெற்று வரும் ஒரு பிரதேசமாகவும் காணப்படுவதனால் மாற்றுக் காணியொன்றினை பொருத்தமான இடங்களில் அடையாளப்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற வலுவான கோரிக்கை நியாயமானதே.

தற்காலிகத் தீர்வுக்காக வழங்கப்பட்ட காணியில் கொரோனா ஜனாஷாக்கள் தொடர்ந்து நல்லடக்கம் செய்யப்பட்டு வரும் நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள அதிக மரணங்களால் மக்களின் குடியிருப்பு, சேனைப்பயிர்ச் செய்கை நிலங்கள், வயல் காணிகளிலும் ஜனாஷாக்கள் அடக்க வேண்டிய நிலையேற்பட்டு வருகின்றது. இதனால் இப்பிரதேசத்தில் வாழும் வறிய மக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலை தொடருமாக இருந்தால், இப்பிரதேசத்தில் வசிப்போர் மாற்று வழியின்றி அங்கலாய்க்கும் நிலை உருவாகும். இப்பிரதேசம் மயான பூமியாக மாறும்.

கடந்த கால யுத்த சூழலினால் பாதிக்கப்பட்ட மக்கள் அன்றாட வாழ்வாதாரத்துக்காக இப்பிரதேசத்தில் குடியேறி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கான முறையான காணிக்கான அனுமதியைக்கூட துரிதமாக வழங்காமல் இழுத்தடிப்புச் செய்து வரும் நிலையில், அதனை அரச காணியாக அபகரிக்க முயன்றால், பல ஆண்டுகளாகப் பராமரித்து வரும் ஏழை மக்கள் நடுத்தெருவுக்கு வரும் நிலையும் உருவாகலாம்.

இவ்வாறான விடயங்களில் கவனஞ்செலுத்தி மாற்றுக்காணியினைப் பெற முயற்சி துரிதப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

இது இப்பிரதேச மக்களின் பிரச்சினை மட்டுமன்று. ஒட்டுமொத்த இலங்கை வாழ் இஸ்லாமிய, இந்து, பௌத்த, கிறிஸ்தவ மக்களுக்குமான பிரச்சினை.

ஏனென்றால், இதுவரை சகல சமயங்களைப் பின்பற்றும் மக்களின் பிரேதங்களும் இப்பிரதேசத்தில் அடக்கம் செய்யப்பட்டு வருவதுடன், கொரோனாவினால் மரணித்த வெளிநாட்டவர்களின் உடல்களும் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

ஆகவே, இவைகளைக் கருத்திற்கொண்டு அரசில்யவாதிகள், அரச இயந்திரங்கள், அரச சார்பற்ற மற்றும் சமூக நிறுவனங்கள் மாற்றுக்காணிக்கான கோரிக்கையினை துரிதமாக பரிசீலித்து மாற்றுக்காணியினைப் பெற வேண்டிய சமூகக்கடமையாகின்றது.

அதே நேரம், கடந்த 25.05.2021ம் திகதி மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஹாபிஸ் நஸீர் அஹ்மத் தலைமையில் அவரது ஏறாவூர் காரியாலயத்தில் இடம்பெற்ற விஷேட கலந்துரையாடலில் இங்குள்ள குறைபாடுகள், அங்கு பணிவோருக்கான கொடுப்பனவு, வீதி அபிவிருத்தி, சுற்றுமதில் போன்ற விடயங்களில் அவதானம் செலுத்தப்பட்டதுடன், மாற்றுக்காணிக்கான கோரிக்கை, தேவைப்பாடு தொடர்பில் எதுவும் பேசப்பட்டவில்லை.

இக்கலந்துரையாடல் அன்றைய காலகட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தமையினால் இவ்விடயம் முன்னிலைப்படுத்தப்பட்டு பேசப்பட்டிருக்க வேண்டும்.

ஏனென்றால், குறித்த சந்திப்பில் தேசியளவிலான பிரதிநிதிகள் கலந்து கொண்டதுடன், மாற்றுக்காணிக்கான கோரிக்கைக்கான நியாயப்படுத்தல்களை அவர்களும் உணர்ந்து கொள்ளவும் தேசியளவில் சமூகமயப்படுத்தவும் வாய்ப்பாகவும் அமைந்திருக்கும்.

அதே நிலையில், குறித்த முக்கியத்துவமிக்க சந்திப்பில் ஜனாஷா பணிகளை முன்னெடுத்து வரும் கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் புறக்கணிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு, தற்போது ஏற்பட்டுள்ள டெல்டா அலை அதிக மரணங்களை ஏற்படுத்தி வரும் நிலையில், அதற்கான சகல ஆயத்தங்களையும் சம்பந்தப்பட்ட தரப்பினர் மேற்கொள்ள வேண்டிய கடப்பாடுள்ளது.

இக்கட்டான நிலையில் குறித்த காணியை வழங்கிய இம்மக்களின் நியாயபூர்வமான கோரிக்கையினை வலுவானதாகக் கொண்டு துரித தீர்வை நோக்கி நகர சகல தரப்பினரும் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

காலம் கடந்த ஞானமும் வெள்ளம் தலைக்கு மேலால் போன பிறகு அணைக்கட்ட அடித்தளம் தோண்டும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

அத்தோடு, மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஹாபிஸ் நஸீர் அஹ்மத் அவர்களின் இன்றைய ஊடக அறிக்கை ஆறுதலளிப்பதுடன், உடனடி முயற்சிகள் முடுக்கி விடப்பட வேண்டும் தீர்வு எட்டப்பட பிரார்த்திப்போம்.